**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

Registered No. M. 1434.

# நாடார் குல மித்திரன்.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க
சபையின்று வெளிவரும்,

## ஒருமாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்." (திருக்குறள்)

வயது 1. } 1920ஞு ஜனவரிமீ
சித்தார்த்தி ஞு மார்கழிமீ { பாகம் 5

வியாச விஷயங்கள்.


| | | |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் ... | 129 |
| 2. | பொன்னுசாமி நாடார் ... | 130 |
| 3. | மதுரை ராமனுட்ஜில்லா கான்பரன்ஸ் | 131 |
| 4. | நாடார் ஜனங்களுக்குசில குறிப்பு ... | 143 |
| 5. | தாய்க்கும்பிள்ளைக்கும்சம்பாஷணை ... | 146 |
| 6. | இலங்கை வர்த்தகம் ... | 147 |
| 7. | கற்கைநன்று ... | 148 |
| 8. | சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு | 151 |
| 9. | மித்திரனுக்கு வேண்டியதென்ன? ... | 152 |
| 10. | நாடார்களும் கோம்பைநகரமும் ... | 153 |
| 11. | அநுதாபக்கவி ... | 154 |
| 12. | வியாசநேசர்களுக்கோர் விண்ணப்பம் வந்தனோபசாரம் | 155 |
| 13. | கையெழுத்தில்லாக் கடிதம் ... | 156 |
| 14. | போஷகர் வரவு ... | 157 |
| 15. | துண்டு துணுக்குகள் ... | 158 |
| .6. | எனதுவர்த்தனம் ... | 160 |
| 17. | அநுபந்தம். ... | |


ஸ்ரீ சு. ஆ. முத்துநாடார் பத்திராதிபர் பத்திராசிரியர்.
நவரத்னம் பிரஸ், மதராஸ்.
1920.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## சந்தாதாரர் கவனிக்கவேண்டிய விதிகள்.

1. பதில் தெரிய விரும்புவோர் ரிப்ளை எழுதவேண்டும்.

2. சந்தாதாரர்கள் தமது நெம்பரைக் குறித்தனுப்புவதுடன் முழு விலாசத்தையும் விவரமாகத் தெரிவிக்க வேண்டும்.

3. இராஜ விரோதம், புறமத தூஷணை முதலிய அனாவசியமான கடிதங்களை அங்கீகரிக்க முடியாது.

4. கடித விஷயதான மெழுதுவோர் பொதுவான வியாசமாகவே எழுத வேண்டும். அனாவசியமான வியாசங்களை பதிப்பிக்க முடியாது.

5. சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் முன்பணமேனும் வி.பி. மூலேனும் செலுத்தலாம்.

6. எந்தமாதத்தில் சந்தாதாரராய்ச்சேர்ந்தாலும் முந்திய பத்திரிகைகளையும் சேர்த்தனுப்பப்படும்.

7. படிக்கத் தெரியாமலும், வித்தியாசமான பதப்பிரயோகமும், கடிதமிரண்டு பக்கமும் எழுதிவரும் வியாசங்களை கவனிக்க முடியாது.

### சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு தபாற்கூலி யுள்பட வருட மொன்றுக்கு ரூபா 1 8 0

சிங்கப்பூர், நெட்டால் முதலிய ஜலப்பிரதேசங்கட்கு தபாற்கூலி உள்பட வருடமொன்றுக்கு ரூபா 2 0 0.

ஆறுமாத சந்தா கிடையாது.

---

### விளம்பர விகிதம்.

மாதம் ஒன்றுக்கு 1-பக்கத்திற்கு ரூபா 3 0 0.
,, ,, ½-பக்கத்திற்கு ,, 2 0 0

நீடித்தகால விளம்பரங் கொடுப்போர்களுக்கு சந்தாற்பானு சாரமாய் சகாயமான சார்சுக்கு விடப்படும் ரிப்ளை எழுதி பதில் தெரியலாம்.

---

### போஷகர் விவரம்.

மொத்தமாக ரூபா 50 கொடுப்பவர்கள் போஷகர்.
மொத்தமாக ரூபா 25 கொடுப்பவர்கள் ஜீவியசந்தாதாரர்.

### போஷகர் வரவு

பாலக்காடு மாஜிகவுன்சிலர், ஒலவக்கோடு வர்த்தகம். ம-ா-ா-ஸ்ரீ. க. கு. பொன்னப்ப நாடாரவர்கள் வரவு ரூ. 50 0 0.

இப்படிக்கு,
ஆ. ஆ. முத்து நாடார்,
பத்திராதிபர்.
நாடார் குல மித்திரன் ஆபீஸ்,
அருப்புக்கோட்டை.



வேலுமயிலுந் துணை.

# நாடார் குல மித்திரன்.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப்பிரசங்க சபையினின்று வெளிவரும்

ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.


வயது 1. } 1920ஸு ஜனவரிமீ சித்தார்த்திஸு மார்கழிமீ { மாதம் 5.

---

### கடவுள் வணக்கம்.

அரும்பொனே மணியேயெ னன்பேயெ னன்பான
அறிவேயெ னறிவி லூறும்
ஆனந்த வெள்ளமே யென்றென்று பாடினேன்
ஆடினேன் நாடி நாடி
விரும்பியே கூவினே னுளறினே னலறினேன்
மெய்சிலிர்த் திருகை கூப்பி
விண்மாரி யெனவெனிரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தே னியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனா னாலுமுனை
யிடைவிட்டு நின்ற துண்டோ
என்றும்நீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ
யேதேனு மறியா வெறுந்
துரும்பனே னென்னினுங் கைவிடுதல் நீதியோ
தொண்டரொடு கூட்டு கண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுக வாரியே.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection



# பொன்னுசாமி நாடார்

## பொன்னுலகப் பிராப்தம்.

பிறையாறு, ஸ்ரீமான் வெள்ளைய நாடாரவர்கள் புதல்வரும், நாடார் மகாஜன சங்கம் பிரசிடெண்டுமான ஸ்ரீமான் வே. பொன்னுசாமி நாடாரவர்கள் நாளது சித்தார்த்தி ஞு மார்கழிமீ 8உ செவ்வாய்க்கிழமை இரவு 25 நாழிகைக்கு மார்வலிகண்டு இம்மண்ணுலகைவிட்டு அவ்விண்ணுலகெய்தினர் என்னும் தேசவியோகானந்தத்தை நமது மித்திரன் வாயிலாகப் பாராட்டுகின்றோம். எல்லாம்வல்ல இறைவன் இப்புருஷோத்தமரின் குடும்பத்தினருக்கு ஆறுதலளிப்பாராக.

### புகழ்ச்சி விருத்தம்.

சீர்கொண்ட திருமகளு மருமகளுங் கற்பூர
தீபங்கை யேந்தி நிற்கத்
திலோத்தமை ஊர்வசி ரம்பைமே னகையாட
செய்யகவி வாணர் பாடப்
பேர்கொண்ட தேவதுந் துமியொரு புறம்பேச
பெரியோர்க ளாசி கூறப்
பெருமைமிகு வேதியர்கள் வேதகீ தஞ்சொலப்
பிறையால வட்டம் வீசத்
தார்கொண்ட வானவர்கள் மலர்மாரி பெய்திடஜ்
ஜயவிஜய முரச மார்பத்
தருமரா ஜேந்திரன் வருகிறா னென்னவே
சங்க மெங்குஞ் ஜொலிக்கப்
போர்கொண்ட கந்தருவர் தோள்கொண்ட நறுமணப்
புஷ்பக விமான மீதுப்
பொன்னுலக மெய்தினன் றன்னிகரில் நாடார்குலப்
பொன்னு சாமிக் குரிசிலே.



## மதுரை இராமநாதபுரம் ஜில்லாக் கான்பரன்ஸ்.

இக்கான்பரன்ஸ், 22-11-19-23-11-19-ஆம், மதுரை விக்டோரியா எட்வர்ட் ஹாலில், சென்னை ஐக்கோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் வி. ராஜகோபாலாச்சாரியாரவர்கள் தலைமையின்கீழ் வெகு சிறப்புடன் நடைபெற்ற விபரங்கள் யாவும் தினசரிப் பத்திரிகைகளில் உடனுக்குடன் வெளிவந்திருப்பதை விபரமாக யாவரும் அறிந்திருக்கலாம். ஆதலால் நாம் சொல்வது அதிகமிராது.

இம் மகாநாடு முதலாவதாகக் கூட்டப்பட்டதே யானாலும் கூட்டத்தில் வியாபாரிகளும் விவசாயிகளும் தொழிலாளிகளுமே அதிகம் பேர் வந்திருந்ததிலிருந்தும் கூட்ட நடவடிக்கைக ளெல்லாம் உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் இனிது நிறைவேறியதி லிருந்தும், பொது ஜனங்களுக்குள் தேச முன்னேற்ற விஷயமாய் அதிகப் பரபரப்பேர்ப்பட்டிருக்கிற தென்பதை நாம் விரித்துரைக்க வேண்டியதில்லை.

### அவைத்தலைவர்.

தலைவரவர்கள் சாந்தகுணமும், தயாளசிந்தையும், கல்வி அறிவும் சர்வானு போகமும்பெற்று, கூட்டத்தில் விவாதத்திற் குரிய விஷயங்கள் தோன்றும்போ தெல்லாம் தம்முடைய சாமர்த்தியத்தால் கலவரமின்றிக் காரியங்களை முடித்துச் ஜெயம்பெற்று விட்டார். அவருடைய வாக்குநயத்தில் மயங்காதமனிதர் ஒருவருமிராரென்றே சொல்வோம்.

முன்னொரு காலத்தில், தேவர் துயர்தீர்க்க மகாவிஷ்ணு அரசனாக (ராமன்) ப்பிறந்து கஷ்டமடைவோர்க்கு ஆதரவு காட்டியது போல், இவர் ராஜன் என்ற பதத்தை இவர் நாமத்தில் முதலடியாகக் கொண்டு இந்திய ஜனங்களின் கஷ்டத்தைத் தீர்க்கவந்தவராகவும்,

கோபாலனாகப் பிறந்து கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்து பசுக்களை ரட்சித்ததுபோல், இவர் கோபாலனென்ற நாமத்தை நடுவடியாகக் கொண்டு பசுவாகிய ஜீவன்களைப் பாதுகாக்க வந்தவராகவும்,

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

அருச்சுனனானவன் தன்னையும் தன் சகோதரர்களையும் நிந்தித்து கஷ்டத்துள்ளாக்கி பத்தினி துரோபதையையும் ராஜசபையில் மானபங்கம் பண்ணிய பகையாளிகளைக் கருவறுப்பேனென்று பிரதிக்ஞை செய்துவிட்டு, யுத்தமூண்டகாலம் தான் முந்திவாக்குரைத்த சபதங்களை யெல்லாமறந்து பகைவரெனப் பட்டவரெல்லாம், பந்துமித்திர சகோதரர்களாகவும், குருவாகவும் தோன்றப் படுகின்றனரே இவரில் யாரைக் கொல்வது, யாரை வெல்லுவது, என்று மயங்கும்போது ஆச்சாரியராகவிருந்து கீதோபதேசம் செய்துவைத்து, சந்தேகம் தெளிவித்ததுபோல் இவர் ஆச்சாரியார் என்ற நாமத்தை நடையடியாகக்கொண்டு இந்துதேசாபிமானிகள் இந்தியாவுக்கு இப்பொழுதே சுயஆட்சி பெறவேணுமென்றும், அது பெரும்வரை கிளற்சிசெய்ய வேணுமென்றும், முதலாவது பல சபைகளில் பேசித் தீர்மானித்துவிட்டு பின் அதிகார வர்க்கத்தவர்கள் முகவெட்டுக் குட்டப்பட்டு, முன் வாக்கினிக்கப்பேசிய வைராக்கிய வசனங்களனைத்தையுமறந்து, மிதவாதம் தேசியம் திராவிடம் எனப்பலவாகப்பிரிந்து, சொடுத்ததை வாங்குவோமா கொஞ்சங்கூட்டிக் கேட்போமா, முற்றிலுங் கேட்போமாவென்று மயங்கித் தயங்குமிந்த நேரத்தில், மனிதனுக்கு இயற்கையாக ஒரு பெரிய சக்தியுண்டு. அச்சக்தி பயமென்னும் மூடுதிரையால் மறைக்கப்பட்டிருக்கின்றது. அத்திரையை தைரியமென்னும் வாளால் சேதித்து விட்டோமானால், அச்சக்தியை யாராலும் வழிமறிக்க முடியாது. ஆகையால், வெளித் தோற்றத்தைக் கண்டுமயங்க உங்களுடைய சக்தியை ஞாயமான வழியில் நேர்முகமாய்ச் செலுத்துங்கள். தோன்றுவதெல்லாம் இன்றோ, நாளையோ, சற்றுநேரத்திலோ, அழியக்கூடியது என்பதை கடைப்பிடித்து அஞ்சாமல் முன்செல்லுங்கள் நீங்கள் ஜெயம் பெறுவீர்களென்று உபதேசித்தவராகவும் விளங்கிய ராஜகோபால ஆச்சாரியார், ஒரு அவதார புருஷரென்று சந்தேகமறச்சொல்வோம்.

## நாடார்களைப் பற்றிய சம்பவம்.

முதல்நாள் முற்பகல் நடவடிக்கை நாடார்களை இதுவரையும் இந்தியக் கோயில்களில் சிலயிடங்களில் சுவாமி தெரிசனம் செய்வதற்கு, உள்ளே விடுவதில்லையென்ற தடையை விலக்கப்பட வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை கனம் இராமச்சந்திரய்யரவர்கள் கொண்டுவந்தார். மதுரை முனிஸ்பல் கௌன்ஸிலர் கனம் சந்தான கிருஷ்ணநாயுடு அவர்களும், கனம் கே. ஆர். வெங்கிட்டராமய்யரவர்களும்



அதை ஆமோதித்து பற்பல ஞாயங்கள் அடைமொழி கொடுத்துப் பேசினார்கள். இடையில் ஒருவர், இது ராஜீய சம்பந்தமான கூட்டமாதலால் ஜனசாரமான விஷயத்தை இங்கு தீர்மானிக்கக் கூடாதென்றும், அதற்கு அனுமதி கொடுக்கப்படாதென்றும், தலைவரவர்களுக்கு ஒருவிகிதம் எழுதியனுப்பியிருந்தார். தலைவரவர்களோ இக்கூட்டத்தில் தீர்மானங்கொண்டு வரவும், ஆலோசிக்கவும், அக்கிராசனாதிபதியென்ற ஹோதாவில் எனக்கதிகார முண்டென்றும் அப்படியே அனுமதி கொடுத்திருக்கிறேனென்றுங் கூறியமர்ந்தார்கள்.

அப்பால் மதுரை ஆர். கணபதி ஐயர் (வக்கீல்) எழுந்து படபடப்புடன் ஆத்திரங்கொண்டு தேகம்நடுங்கி இது ஒருநாளுமில்லாத திருநாளாயிருக்கிறது. ராஜீயசம்பந்தமான கூட்டத்தில் வழக்கத்துக்கு விரோதமான தீர்மானங்கள்கொண்டு வரக்கூடாது. தீர்மானத்திற்கு அனுமதிகொடுக்க தலைவரவர்களுக்கும் அதிகாரங் கிடையாதென்றார். உடனே தலைவரெழுந்து இக் கூட்டத்தைப் பொருத்தமட்டும் எனக்கு சர்வாதிகாரமுமுண்டு. எனக்கதிகாரமில்லையென்று சொல்ல ஒருவருக்கும் அதிகாரமில்லை, கூடுமானால் வேறு கூட்டம்போட்டுப் பேசிக் கொள்ளலாமென்றும் பிடித்துரைத்தும், மிஸ்டர் அய்யரவர்கள் விடாமல், சபையைப் பார்த்து நாடார்களைப்பற்றிய விஷயம் மதசம்பந்தமானதென்றும், இங்கே யாவரும் ஆகமசாஸ்திரங் கற்றவர்களில்லையென்றும், கனம் ராமச்சந்திரய்யரவர்களுக்கு ஆகமத்தைப்பற்றி யொன்றும் தெரியாதென்றும் சொன்னார். பின்னும் மகம்மதிய கிறிஸ்தவ சகோதரர்களைப் பார்த்து, நாங்கள் உங்கள் பள்ளிவாசல் சர்ச் முதலிய விவகாரங்களில் கலப்பதில்லை. அதுபோல் நீங்களும் இதில் சம்மந்தப்படக்கூடாது. சமமந்தப் பட்டால் நாங்களும் உங்கள் விவகாரங்களில் சம்பந்தப் படுவோமென்று பயமூட்டினார். தற்காலத்திலுள்ள வளக்கங்களினாலேயே அன்பும், ஜீவகாருண்யமும், ஒற்றுமையும், வளருகின்றதென்றும் இதுபோன்ற பின்னுஞ்சில விஷயங்களையும் சொல்லி யமர்ந்தார்.

கனம் சுந்தரராஜ அய்யங்கார் அவர்கள் எழுந்து தீர்மானத்தை ஆதரித்துப் பேசும்போது நாடார்கள்முன் சுராபானத்தைத் தொட்ட வழக்கத்தால் நீக்கப்பட்டிருந்தார்கள் இப்போது அவர்களை நீக்கிவைக்க ஞாயமில்லையென்று சொன்னார். ராவ்பகதூர் பி. சுப்பராய ஐயரவர்களும் ஆதரித்துப் பேசினார்கள். கனம் சுந்தரபாண்டிய ஓதுவாரவர்கள் தீர்மானத்தை ஆதரித்துப் பேசும்போது பின்வருமாறு பேசி

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

ணர். தமிழ்நாட்டில் தொழிலை யனுசரித்து ஜாதி தோன்றியதென்றும் இழிதொழிலாளர் உயர்தொழிலாளர் என இருவகைபென்றும், பொருளுக்கிழிவா? அல்லது பொருள் செய்தவர்க் கிழிவாயென்பது கவனிக்கத் தக்கதென்றும், புரநானூற்றின்கண்ணே அதிகமான் வஞ்சியென்னும் சேரமன்னன் இறந்தகாலையில் நமது ஒளவையார் அழும்போது அம் மன்னன் தனக்குக் கொடுத்தபின் தான் குடித்தானென்றும் கட்குடித்தலைப்பற்றிப் பாடியிருப்பது குறிப்பிடத் தக்கதென்றும் பூர்வீகம் என்பதும் வழக்கம் யென்பதும் எவையென்றும் தேவஸ்தானக் கமிட்டியார், 1915-ல் வெளியிட்ட விளம்பரத்தில் முழுஉடையென்று குறிப்பிட்டது யென்னவென்றும், நாம் எந்தக்கால முதல் முழுஉடை தரித்தோமென்றும், நாடார்கள்பெரும் பாலோர் செல்வந்தனர்களா யிருக்கிறார்க ளென்றும் அவர்களிற் பலர் தேவாலயங்களுக்கு கைங்கரியங்கள் செய்து வருகிறார்களென்றும், பிரபுக்களாயிருக்கும்போது எஜமானென்று அவர்களுக்கு மரியாதைகாட்டி அவர்களுதவி வேண்டும்போதுமட்டும் சகோதரத்வம் கொண்டாடுவதும், இத்தகைய விஷயங்களில் ஏன் அவர்களுக்கு யிடங்கொடுக்கக் கூடாதென்றும், தேச முன்னேற்றத்தையும் ஒற்றுமையையும் உத்தேசித்து இதைக் கவனிக்கவேண்டியது அவசியமென்றும் பேசிமுடித்தார்.

தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டதில் எட்டுபேர்கள் பாதகமாகவும் மற்றனைவரும் (சுமார் 600) சாதகமாகவும் ஓட்டுக்கொடுக்கவே தீர்மானம் நிறைவேறிவிட்டது. அம்மட்டும் சாதகமாய் நின்று ஓட்டுக்கொடுத்த சகோதரர்கட்கெல்லாம் என்றும் நன்றி செலுத்துவோமாக.

## கவனிக்கத்தக்கது.

மிஸ்டர் ஆர். கணபதி ஐயர் ஆக்ஷேபணையைப்பற்றிக் கொஞ்சம் கவனிப்போம். ஆகம சாஸ்திரத்தைப்பற்றிக் கூறினாரல்லவா? ஆகம பூசை யேற்பட்டகாலம் எது ஆரியர் காலத்திற்கு பின்னா முன்னா? இப்போதுள்ள மதுரைமாநகர் எந்தக்கால முண்டானது? பாண்டியன்தலைநகர் மணலூரல்லவா? மதுரையில் கடம்பவனமும் லிங்கமும் ஆதியில் கண்டுபிடித்தவன் ஓர் வாணியனல்லவா, அந்தலிங்கத்தைக் கண்டதாய்க் கூறிய வாணியன் சொற்கேட்டு, பாண்டியன் பதியாக்கி பாண்டியன் சிவலிங்கபூசை செய்யாமல், சாப்பிடுகிற வழக்கமில்லையென்று தானே பூசைசெய்து வந்தகாலம் ஆகமவிதியா, வேதவிதியா, கடவுளை முகூர்த்த வடிவமாய்ச் செய்துபூசிக்க, எந்தெந்தச் சாதியாருக்குச் சுதந்தர முண்டென்று ஆகமத்தில் சொல்லியுள்ளது. பிரா



மணரென்றால் பிராமணரென்பார் எந்நியமமுடையவர். பிராமணரென்போர் தற்காலம் பற்பல தொழில்கள்செய்து வருவதற் கெல்லாம் ஆகமத்தில் விதியுண்டா? ஆதிமுதல் பாண்டியன் சிவலிங்கபூசை செய்யாமல் சாப்பிடுகிறதில்லையென்ற விரதமுடையவனாகவிருந்து, ஒருநாள் வேட்டையாடச் சென்று, திரும்பிவரும்போது வைகையில் வெள்ளம் வந்துவிடவே எங்கும் சிவலிங்கபூசை செய்யக் கிடைக்காமல் வருத்தப் படுவதையறிந்த மந்திரியானவர் சமயோசிதமாய் ஓர் மர ஆப்பைநட்டு இதுவே சிவலிங்கமெனக் காட்டி, அரசனைப் பூசிக்கும்படி செய்ததால் அந்தஸ்தலமானது இப்போதும் திருவாப்புடையார் கோயிலென்று பாடல்பெற்றிருக்கிறதே. இதை மிஸ்டர் ஐயர் அறிவாரா? மதுரையிலுள்ள பழைய சொக்கநாதர் கோயில்யாருடையதென்பதும், அதன் பூசைக்கு இன்னும் நாடார்களே படித்தரங்கொடுத்து வருகிறார்களென்பதும், தங்கள் கோயில் பக்கத்தே அவர்களுக்கு பூர்வீக யிடமாகிய நந்தவனம், கிணர், பேட்டைமுதலான கோட்டைகள் காணப்படுவதையும், இப்போதும் ஆவணிமாதம் பிட்டுத் திருவிழாவில், வழக்கமாய் நாடார்களே பூர்வீகத்தில் பாண்டியன் சொக்கநாதனை வைகைக் கறையுடைப்பை அடைக்க ஏவினனென்ற ஐதீகப்படி, அம் மண்டபப்படியை தங்கள் சொக்கநாதர் கோயிலில் வைத்து நடத்தியும் வருகிறார்கள். என்பதையும் காலமும் வரவர மாறிவருவதுபோல், மனிதசுபாவமும் அடிக்கடி மாறிவரும் செயலால், நண்பன் வம்பனாகவும், வம்பன் நண்பனாகவும், வருகிற வழக்கத்தையொட்டி ஒருகாலம் நாடார்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தினால் கோயில்களில் (சகலருக்கும் பொதுவானது) சுதந்தரத்தை இழக்கப்பட் டிருக்கிறார்க ளென்பதையும், மறந்து நாடார்களை கோயிலுக்குள்விட ஆகம விதியிடங் கொடாதென்று மிஸ்டர் ஐயரவர்கள் கூறிய வார்த்தையனைத்தும் பொருத்தமற்றவைகளேயாம்.

## சுராபானச் சோதனை.

தீர்மானத்தை ஆதரித்துப்பேசிய ஒருவர் சுராபானத்தைத் தொட்ட காரணம்பற்றி, அக்காலங்களில் நாடார்களை ஆலயங்களில் நீக்கப்பட்டதாகச் சொன்னது, கனம் சுந்தரபாண்டிய ஓதுவாரவர்கள் சொல்லிய மேற்கோளால் அடிபட்டுப் போயிற்று. ஆயினும், அதைப்பற்றி நாமும் கொஞ்சம் சொல்லியாக வேண்டியிருக்கிறது. இந்நாட்டில் முன்னாளில் சுராபானம் அருந்துவது எக்கூட்டத்தாருக்கும்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

வழக்கமாயிருந்து வந்திருக்கிறது. (இப்போது காப்பி சாப்பிடுவது போல்) அதுபற்றியே கம்பர் புகழேந்தி முதலான அந்நாட் புலவர்கள், இராமாயண முதலிய காவியங்களில் உண்டாட்டுப்படலம் என்று ஒன்று உண்டாக்கி யிருக்கின்றார்கள். மேலும் சுராபானம் உற்பத்திசெய்வது நாடார்கள் குலத்தொழிலும் அல்ல, ஆதியில் அதை ஒருவகுப்பார் உற்பத்தி செய்து வந்தார்கள். ஒருகாலம், பாண்டியனானவன் சுராபானமானது மயக்கந்தரக் கூடியதாயும், மனிதருக்கு மிக்கக் கெடுதிதரக்கூடியதாயு மிருக்கிறது என்பதையும் ஆலோசித்து, இதை எப்படியாவது மாற்றவேண்டுமென்ற சிந்தை யுடையவனாகி சிந்தித்து, சுராபான மிரக்குவதில் சுண்ணாம்பு சம்பந்தப்பட்டால், அது தித்திக்கும் அமுதமாகி, (காப்பியிலும் கேடுண்டு என்பதைக்கண்டு அதை யெப்படிமாற்றி எப்பானத்தை யுபயோகிக்கலாமென்றுயோசிப்பதுபோல்) அது உலகத்திற்கே பெருநலத்தைக் கொடுக்குமென்ற ரகசியத்தைக் கண்டுபிடித்து அத்தொழிலை தன்னாடெங்கும் பரோபகாரமாகப் பரவச்செய்தான். வேற்றரசர் படையெடுப்பால் ராச்சியமிழந்து கஷ்டப்பட நேர்ந்தகாலம், நாடார்களில் பலபேர்கள் கற்பக அமுதை உற்பத்திசெய்து ஜீவிக்கும்படியாயிருந்தது. (ருஷியச் சக்கிரவர்த்தி தாரணியிழந்து சாதாரண மனிதரானது போல்) அதுவும் விவசாயத் தொழிலேயன்றி வேறல்ல. அக்காலம் யந்திரமுதலிய சாதனங்களிருந்தாலும் அத்தொழிலே பிரதானமாய்க் கொண்டிருப்பார்கள். அப்படிக்கில்லாது எப்படியாவது, ஜீவியத்தைக் கழிக்க அத்தொழிலை (பதநீர்) யும் மற்றவிவசாயங்களையும் செய்வதைத்தவிர வேறுவழியில்லை.

பாண்டிய ராஜ்ஜியமானது நாயக்க அரசர்களால் ஜெயிக்கப்பட்ட காலத்தில் ஜெயிக்கப்பட்ட ஜாதியார்களாகிய பாண்டியகுல நாடார்களை அடக்கி வைக்கவேண்டிய அவசியம் நாயக்க அரசருக்கு ஏற்படவே, அக்காலத்தில் பாண்டியர்களால் அடக்கிவைக்கப் பட்டிருந்தவர்களும் பலவான்களும் ஆனால் ஆணும்பெண்ணும் சுராபான மருந்திக்களிப்பவர்களுமாயிருந்த ஓர் ஜாதியார் (இப்போது அப்படியல்ல) நாயக்கர்களுக்கு ஒத்தாசை செய்து, ராஜ்ஜியத்தில் செல்வாக்கடைந்து விட்டார்கள். அவர்களுடைய தூண்டுதலாலேயே நாடார்களிற் சிலரை நாயக்கராஜ்ஜியத்தார் கட்டாயப்படுத்தி பதனீர் செய்வதற்குப் பதிலாக சுராபானம் இரக்கும்படி செய்துவிட்டார்கள். ஆயினும் தங்கள் தலைவர்களுடைய ஆக்ஞையை சிரமேற்கொண்டு நடக்கவேண்டிய நாடார்கள் தங்கள் கஷ்டகாலத்தை நினைத்து, (அரிச்சந்திரன் கன்றரித்ததுபோல்) சுராபான மிரக்கினாலும் பனையடியில் வைத்து விடுவோமேதவிர யாதொருவித உபயோகத்துக்கும் பங்கிட்டுக்கொடுக்க முடியாதென்று சொல்லி விட்டார்கள். சுமப்பவர்களும், விற்பவர்களும், பணிக்கர்கள் என்பது இன்றும் விளங்கிவருவதை யறியலாம்.



தற்காலத்திலே பலவிடங்களிலும் சகல ஜாதியார்களும் தங்களுடைய சுயமதிப்பையும் கௌரவத்தையும் இழந்து சுராபான மருந்திக் களிப்பதுபோலவே நாடார்களிலும் சிலர்சுராபானம்விற்பனை முதலிய தொழில்களைச் செய்து வருகிறார்கள் என்பது காலச்சக்கரத்தின் சூழ்ச்சியேயன்றி வேறென்னவென்று சொல்லமுடியும்.

நாடார்களின் பூர்வ ராஜ்ஜியமாகிய பாண்டியநாட்டின் எல்லையாகிய மதுரைச் ஜில்லாவின் ஒருபாகத்திலும் திருநெல்வேலி ஜில்லா, இராமநாதபுரம் ஜில்லாக்களிலும் மாத்திரம் இந்துக் கோயில்களில் நாடார்கள், சுராபானம் சம்பந்தமான தொழிலுடையவர்கள் என்ற காரணத்தைக்கொண்டு வரக்கூடாதென்றும் சொல்வது பொருந்தாது. ஏனெனில், சுராபானம் குடிப்பவனும், கொலைத்தொழிலால் வரும் புலாலுண்டு வாழ்பவனும் தேவாலயத்தில் புகும்போது நாடார்களை மேற்சொன்ன காரணத்தால் தள்ளிவைக்கப் பட்டிருக்கிறதென்று கூறுவது உண்மையை வெளிக்காட்டாமல் மறைக்கச்செய்யு முயற்சியேயன்றி வேறல்ல.

உண்மை யென்னவெனில் தெய்வ சந்நிதியிலும், அரசர் சந்நிதியிலும், வணங்குவோர் புறமுதுகு காட்டக்கூடாதென்ற பொதுவிதியை அநுசரித்து பாண்டிய நாட்டிலுள்ள சிவஸ்தலங்களிலெல்லாம் பாண்டியனும் அவன் வம்ஸத்தவர்களும், சுவாமி தெரிசனம் செய்தவுடன் மற்ற வருணத்தவர்களுடனே தாங்களும் பின்புறமாக நேர்ந்து செல்வதை அகௌரமென்றோ, அல்லது தாங்கள் தேசத்தை யாள்பவர்களென்ற மமதையாலோ, தங்களுக்கென்று ஆலயங்களிலெல்லாம் மேல் புறத்திலொரு வாசலமைத்து, சுவாமி தெரிசனம் செய்யும் பொழுது கீழவாசல்வழியே சென்று தெரிசனமானவுடன், மேல்வாசல் வழியே செல்வதும் வழக்கமாகக் கொண்டிருந்தனர். சுவாமி சந்நிதியிலும் நக்கீரரென்ற புலவர்பெருமான், முக்கண்ணைப்போல் எக்கண்ணைக் காட்டினும் கவிக்குற்றமே, என்று சொன்னதுபோல், முதுகுகாட்டாத வாறுசெல்வது மற்றவர்களுக்குச் சமானமாய்ப் போய்விடுகிறதென்றும் தாங்கள் வீரர்களானதால் மற்றவர்களிலும் தாங்கள் மிஞ்சியவர்களென்று நினைத்து முதுகுகாட்டிச் சென்றால் சுவாமிக்கித் தோல்வியுற்றவராகவும்-நினைக்கனர்போலும்,

தலையினிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையினி ழிந்தக்கடை. என்னும்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

தெய்வப்புலவர் திருவாக்கிற் கேற்ப விஜயநகரத் தரசர்வந்து பாண்டிய ராச்சியம் கைமாறியவுடனே ஆளுஞ் சாதியாராயிருந்து தங்களுக்கென சிவாலயத்தில் ஓர் வாசலமைத்துக்கொண்ட பாண்டிய குல நாடார்களிடத்தில் துவேஷங் கொண்டிருந்த ஜாதியார்கள் மேல வாசல்வழி அரசர் செல்வதற்கேயன்றி ஏனையோர்க் கில்லையென்றும், நாடார்கள் அரசிழந்து விட்டதால் மேல்வாசல் வழிச்செல்வது கூடாதென்றும், தடுத்து அந்தவாசலையும் அடைத்து விட்டார்கள். இது விபரத்தை மதுரை, ராமேஸ்வரம், திருச்சுழிகை, முதலான பாடல் பெற்ற பாண்டியஸ்தலங்களில் இன்னும் பார்க்கலாம். அது முதலாகவே நாடார்கள் முன்கூறியபடி ஈசுரனிடத்திலும் புறமுதுகு காட்டுவது அழகல்லவென்று நினைத்தவர்க ளானதால், கோயில்களுக்குப் போகாமல் நின்றுவிட்டார்கள். என்ற உண்மை நாடார்கள் சம்மந்தமான சரித்திரம் எழுதிய ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் எழுதியிருக்கிறார்கள். எந்த ஆளுஞ் சாதியானாலுஞ் சரி. தன் ஜாதிக்கென்று ஒரு சட்டமும் விதியும் ஏற்படுத்துமானால், அந்தச் சாதியின் முன்னேற்றத்திற்கு அந்தியகாலம் ஏற்பட்டு விட்டதென்பது சரித்திர சம்பந்தமான உண்மையென்பதை நாம் அனுபவத்தில் பார்த்திருக்கிறோமாதலால், நாடார்களுக்கும் தவழ்காலம் யேற்பட்டு தங்களுக்காகத் தாங்கள் செய்தவிதி, முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும் என்றபடி, நீங்கள் இந்துக்களா யிருந்தாலும்சரி, சமயப்பற்று உங்களுக்குள் வேருன்றி யிருந்தாலுஞ்சரி, நீங்கள் தனியேயிருங்கள் எங்களுக்குள்ள சுதந்தரம் உங்களுக் கில்லையென்று இதர ஜாதியார்கள் சொல்லும்படி யேற்பட் டிருக்கிறதென்பது சந்தேகமில்லாத உண்மையே.

## இரண்டாவது நாள்.

மறுநாள் காலையிலும் மாலையிலும் கான்பரன்ஸ்கூடி, ராஜாங்க விஷயமாகவும், ஜில்லா சம்பந்தப்பட்ட பல விஷயங்களும் பேசித் தீர்மானிக்கப்பட்டது. இதற்கிடையில் திருச்சிடாக்டர். ஸ்ரீமான் டி. எஸ். ராஜன் அவர்கள், அக்கிராசனத்தின்கீழ் ஆசாரச் சீர்திருத்தக் கான்பரன்ஸ் ஒன்று நடைபெற்றது. அதற்கு அருப்புக்கோட்டை ஸ்ரீமான், மா. வே. மாயநாடாரவர்கள், உபசரணைக் கமிட்டிச் சேர்மனாயிருந்து ஜனங்களை நல்வரவேற்று அரியதோர் பிரசங்கம் செய்தார். தேசஜனாசார சீர்திருத்த சபையில் நாடார் குலத்தில் ஒருவர் உபசரணைக் கமிட்டிச் சேர்மனாயிருந்தது இதுவே முதல்தடவை. இவர் தம் குலாசார சீர்திருத்த விஷயத்தில் மூல புருஷராய் நின்று



உழைத்திருக்கிறார். மேலும் நாடார்களுக்குள் சிறந்த பணக்காரராயிருந்து தன்குலத்தவர்கள் தேசப் பொதுக்காரியங்களிற் பிரவேசிக்கும்படி முதலாவது வழிசாட்டிப் பிற்காலத்தில் நாடார்ஜன சமூகம் உன்னத நிலைமை யடையப்போகும் பெருமையவரைச் சார்ந்ததேயாம். நாடார் ஜனசமூகம் இவருக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளதே.

இக் கான்பரன்ஸிலும் இந்து ஆலயங்களில் நாடார்களுக்கும் மற்ற இந்துக்களுக்குமுள்ள சர்வசுதந்தரமும், கொடுக்கப்பட வேணுமென்று தீர்மானித்ததோடு, தீர்மானத்தை கூடிய சீக்கிரம் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரவேணுமென்று, பல வகுப்பார்களடங்கிய ஒரு கமிட்டியொன்று நியமனமாகிப் பல மெம்பர்களும் சேர்ந்திருக்கின்றார்கள். அதற்கு கனம் மந்திரேஸ்வரசர்மா அவர்கள் காரியதரிசியாக நியமிக்கப் பட்டிருக்கிறார். இவர் கல்வி அறிவும் அதிக மனோசக்தியும் சுறுசுறுப்பும் வாலிப வயது முடையோரானதால் இவர் காலத்தில் அரியபெரிய காரியங்களைச் செய்து பெரும்புகழ் பெறுவார் என்று நாம் நம்புகின்றோம்.

## இனி என்ன செய்யவேண்டும்.

மதுரைமா நகரிலுள்ள கனவான்களும் கற்றவர்களும் இக் கமிட்டியிற் சேர்ந்து கிராமாந் தரங்களிலுள்ள பெரிய மனிதர்களையும் சேர்த்து தேவஸ்தானக் கமிட்டியார்களையும் மடாதிபதிகளையும் யோசித்து அடுத்த கான்பரன்ஸ் கூடுவதற்குள்ளாக நாடார்களுக்குள்ள மனக்குறையை மாற்றப்படவேண்டும்.

காலங் கடத்துவதற் கிதுகாலமல்ல. அந்நியர் இன்னும் நம்மை அதிகமாய் நெருக்குவதற் குள்ளாக கண்ணின்வேற்றுமை சர்வ நாசமாகவேண்டும். கானடா முதலிய தேசங்களில் இந்தியர் காலடி வைக்கக் கூடாதென்று கப்பலைவிட்டுக் கீழிறங்க வொட்டாமல் ஓட்டிவிட்டதற்குக் காரணம் கேட்கும்போதும் ஜெனரல்போதா ஜெனரல் ஸ்மட்ஸ் முதலானவர்கள் ஜாதித்தத்துவம் இக்காலத்திற்கு ஒத்ததல்லவென்று சொன்னதற்கு மாறாக தென்னாபிரிகா கெட்டால் முதலியவிடங்களில் இந்தியர்களைக் கொடுமைசெய்வது கூடாதென்று ஆக்ஷேபிக்கும்போதும், பீஹார் மாகாணத்தில் சோனேபுரம் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து அங்கிலப்பஜார் யென்ற யிடத்திற்கு, அந்தப் பஜார்வழியே இந்தியர்போகக்கூடாதென்று இவ்வருஷம் ஒரு கலெக்டர்

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

ஆக்ஞை யிட்டது அபவாதமென்று அறிவிக்கும்போதும் இந்திய அரசியல்திருத்தம் பூர்த்தியா யில்லையென்றும், முழுச்சுய ஆட்சி பெறவேணுமென்றுங் கிளற்கிசெய்யப் போகும்போதும் அவர்கள் நம்மைப்பார்த்து உங்கள் தேசத்தில் உங்கள் ஜாதியார் உங்கள் உதிரத்தில் ஜெனித்த உங்கள் சகோதரர்களை உங்கள் தேசத்திலே உங்கள் தெருவிலே உங்கள் வீட்டிலே உங்கள் கோயிலிலே உங்கள் பொதுக் கூட்டத்திலே ஒட்டவிடாமல் ஒதுக்கி வைத்திருக்குங் கொடுமையை அகற்றி விட்டாலன்றோ.......................என்ற ஒரு காரணத்தைச் சொல்லி நம்மைத் தலைகுனிய வைக்கும்படி யிராமல் எங்கும் எல்லோரும் எல்லாச் சுதந்தரங்களும் பெற்றவரா யிருக்கப்பார்க்க வேண்டும்.

## யாருக்குச் சொந்தம்.

சுதந்தர மென்பது யாருக்காவது சொந்தமில்லை. எல்லோருக்கும் பொதுவானதே. சகலருக்கும் பொதுவான ஒரு சுதந்தரத்தை ஒரு பகுதியாருக்கு மட்டுமில்லையென்று சொல்லுகின்ற வரையும் நம் தேசத்திற்குப் பொதுவான சுதந்தரத்தை மற்றொருவர் யில்லையென்று சொல்லப் பாத்திய மேற்படுகிறது. இப்போது நாடார்களுக்கு பக்தி செய்ய ஆலயங்களுண்டு. அவர்கள் சொந்தத்தில் அனேக ஆலயங்கள் கட்டி ஆச்சாரி யபிஷேகம்பெற்ற பல பட்டமார்களையும் தம் சொந்த வினபந்துக்களையும் அவ்விடங்களுக்குத் தக்கபடி ஏற்படுத்தி தேர் திருவிழா முதலிய உற்சவங்கள் செய்து வருகிறார்கள். அவர்கள் கோயில்களில் பிராமணர்முதல் சகல ஜாதியார்களும் போய் சுவாமி தெரிசனம்செய்ய சம்மதித்திருக்கிறார்கள். அதுபோல் மற்ற ஆலயங்களிலும் நாடார்கள் போய்வரப் பாத்திய முண்டென்பதை யாரும் மறுக்க முடியாது.

## அறிந்துகொண்டார்கள்.

இந்தரகசியத்தை போறிவாளர்கள் எப்போதும் அறியாமலில்லை. காலத்தை யெதிர்பார்த் திருந்தார்கள். எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம், என்ற உண்மையைக் கண்டுகொண்டார்கள். உண்மை நிலையைநாட்ட உண்மையோடு வெளிவந்து உழைக்கக் கங்கணம் கொண்டுள்ளார்கள். இந்த நல்லவேளையை நாம்வீணாக்கப் படாதென்றே நாடார்களும் முடிவைக் கண்டுகொள்ள, மதுரைக் கூட்டத்தில் அனேகர் ஆஜராகும்படி நேர்ந்தது. ஆஜரானமட்டும் ஒருவகையால் திருப்தி யடைந்தார்க ளென்பதற் கையமில்லை. உலோகோப காரிகளாக விளங்கும் சூரியர் சந்திராதிகள்போல், சேலம் ஸ்ரீமான் வி. ராஜகோபா



லாச்சாரியாரவர்களும், திருச்சி டாக்டர். ஸ்ரீமான் டி. எஸ். ராஜன் அவர்களும் மதுரைமாநகர் இரண்டு கான்பரன்ஸிலும் தலைமை வகித்துச்செய்த பிரசங்கங்களும் தீர்மானங்களும் என்று மறக்கற்பாலதன்று. அன்றி, ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரவர்கள், மதுரைவாசிகளுக்கு வாக்காலும் நோக்காலும் பல வழிகளைக் காட்டியதோடு செய்கையாலும் ஒரு நல்வழியைக் கற்பித்துவிட்டார். அதாவது தாம் தங்கியிருந்த யிடத்தில் மதவித்தியாசமின்றி மகமதியரையும், கிருஸ்தவரையும், ஜாதிவித்தியாசமின்றி செட்டியார், நாடார், பிள்ளை, நாயுடு, ஐயர், முதலானவருடன் சமபந்தி போஜனம்செய்து வைத்தார்கள். அப்புண்ணிய புருஷர் உண்மையோடு வழிகாட்டிய காரியம் கைகூடுமென்பதற்கு அத்தாட்சியாக அவர் நடத்திய விருந்தில் மகாத்மா காந்தி அவர்களுடைய புதல்வர் தேவதாஸ்காந்தி பிரசன்னமாயிருக்க நேர்ந்ததேயாம்.

## நாடார்கள் இனிச் செய்யவேண்டிய தென்ன ?

தேசாபிமானிகளான ஒருவகுப்பார் நாம் யார் என்றும் நமக்குள்ள குறையென்னவென்றும் அக்குறையை எவ்வாறு நீக்கலாமென்றும் ஆலோசனைசெய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் எப்படியு மிதுவிஷயமாய் கூடியசீக்கிரம் ஒரு முடிவுக்குவந்து விடுவார்கள், நாமும் அவர்களோடு தேசப் பொதுக்காரியங்களில் ஒத்துழைக்க முற்படவேண்டும். ஒதுங்கி நிற்கின்ற வேலையை இனி ஒதுக்கிவிட வேண்டும், நமக்கிருக்கிற பாத்தியதைகளை ஞாயமாய்ச் சொல்லி நலம் பெறவேண்டும் 2. ஜில்லாவிலுள்ள இரண்டு மகாஜன சபையார்செய்த தீர்மானத்தைக்கண்டு அவ் விஷயத்தில் நாம் அவசரப்பட்டு விடக்கூடாது. தேசாபிமானமுள்ள ஒரு வகுப்பார்தான் உண்மையை ஒத்துக்கொண் டிருக்கிறார்கள். ஒத்துக்கொள்ளாத யின்னும் ஒருபெரிய வகுப்பா ரிருக்கின்றார்கள். அவர்களும் இதை லகுவில் ஒத்துக் கொண்டாலுங் கொள்ளலாம். அல்ல அதிகப்பிருவு காட்டினாலுங் காட்டலாம் அவர்களும் நமக்குச்செய்த தப்பிதத்தை அறிந்து, ஒரு முடிவுக்கு வரும்வரையும் நாமும் அலுத்துப்போகாமல் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்.

மேலும் காகம் அன்னநடைக் காசைகொண்டு தன்னடையுங் கெடுத்துக் கொண்டதுபோல், நாம் கோவிலை நினைத்துக்கொண்டே நாம் எப்போதும் செய்துவரும் பெரும் முயற்சியை மறந்து பெருஞ் சாதனங்களை யிழந்துவிடப்படாது. இதுவரையும் நம்மை மறந்து

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

நீங்கள் யார்என்றும் என்னென்றும் கேட்காதிருந்தவர்கள் இப்போது நம்மைக் கூவியழைக்கும் படியான மார்க்கம் எதனால் ஏற்பட்டது. நாம் கல்வியிலும் ஒழுக்கத்திலும் எங்கும் பரபரப்பைக்காட்டி, கலாசாலைகளை நாட்டி, மகாஜனசங்கம் கூட்டி, நம் திறமையைக் காட்டி வரும் பெருமுயற்சியா லென்பதை மறந்துவிடக்கூடாது. நமக்கு கல்வியின் பேரிலும், பொதுஜன சேவையின் பேரிலும், தேசப் பொதுக் காரியத்தின் பேரிலும், இருக்கிற அபிமானத்தைப் பார்க்கிலும் இன்னும் கொஞ்சம் அதிகமா யேற்படும் பக்ஷத்தில் கூடியசீக்கிரங் குலத்தவர்களில் எத்தனையோ கல்விமான்களையும் சட்டசபை லோக்கல் போர்டு மெம்பர்களையும் பார்க்கலாம். அப்போது ஜில்லா கான்பரன்ஸ் முதலானவைகளையுங்கூட நாமே தலைமையாக நின்று நடத்தக்கூடிய பலத்தையும் பெரலாம். அவ்வளவு மகத்தான உன்னத பதவியடையக் கூடிய சக்தி நம்மிட மிருக்கின்றது. அதை நம் முயற்சியால் வெளிப்படுத்த வேண்டும். அதற்கு கல்வியெனுங் கருந்தனத்தைக் கைக்கொள்ளவேண்டும்,

நம் மிந்தியா தேசத்திற் கேற்பட்டிருக்கிற குறைகளையும் குறைகள் தீர்க்கப்பட வேண்டிய வழிகளையும் இங்கிலாந்து அமெரிக்கா முதலான தேசங்களுக்குச் சென்று பிரசார வேலைசெய்து திரும்பிவந்திருக்கும் தலைவர்களைக் காணவேண்டும். கண்டு இங்கிலாந்து சென்று இந்தியாவைப்பற்றிப் பிரசார வேலைசெய்ததோடு நின்றுவிடாமல் இந்தியாவில் ஜாதிவேற்றுமை தலைதூக்கி யாடுவதைத் தணிப்பதற்கு உங்கள் பிரசார வேலையெனும் உடுக்கையைத்தட்டி யொடுக்கவேண்டுமென்றும், ஜாதித்துவேஷந் தானே விலகிடில் பொது எல்லாக் குறைகளும் தானே தீர்ந்துவிடு மென்பதை எடுத்துரைக்கவேண்டும். அதற்குள் நமக்கு ஆங்காங்குள்ள வேற்றுமைகளையும் அடியோடொழிக்க வேண்டும்.

நாடார்குல நேயர்காள் உலகமெங்குந் தற்சமயம் ஏற்பட்டுவரும் கிளற்சியும்ஒவ்வொருதேசத்தார்கள்செய்யுமுயற்சியும்ஒவ்வொருவரும் நம்மில் அனேகர் அறிந்துகொண்டோம் நாம் இச்சமயம் நித்திரையிலிருப்பது சரியல்ல வென்பதையும் தெரிந்துகொண்டோம். கொண்டாலும் தீவிரமான முயற்சிசெய்யும் மார்க்கம் போதாது. கல்விப் பொருளும் செல்வப் பொருளும் நிறையப்பெற்ற அபிமானிகள் ஆதரவுபோதாது. இவ்விருபாலாரும் ஒருமுகமாய் நின்று நிமிர்ந்து பார்க்காமல் ஒரு காரியமும் முடியாது. ஆதலால் கற்றோரும் செல்வம் பெற்றோரும் கருத்துடன் கவனிக்கும்படி வற்புறுத்து கின்றோம்.

பத்திராதிபர்.



## நாடார் மஹாஜனங்களுக்குரிய சில குறிப்புகள்.

நமது மித்திரன் 4-வது சஞ்சிகையில், பெற்றோர்கள் செய்ய வேண்டிய கடமையில், குழந்தைகளுக்கு சிறு பிராயத்திலேயே கல்வி போதிக்க வேண்டுமென்றும், அதிலும் மந்தபுத்தி யுள்ளபிள்ளைகளுக்குக் கல்வி போதிப்பதிலேயே பெற்றோர்கள் அதிக கவனஞ் செலுத்த வேண்டுமென்றும், தற்காலத்தில் கல்வியில்லாத ஜாதியும் நகரமும் நாடும் அடிமைகளாகிக் காலங் கழிக்கிறதென்றும் கூறினோம்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கல்வி போதிப்பதில் தற்காலத்தில் அநேகர்கவர்ன்மெண்டில் உத்யோகம்பெற வேண்டுமென்ற, ஆசை யுடையோராய் B. A. M. A. முதலிய பட்டங்களைபெற முயற்சிசெய்து படிக்கவைக்கிறார்களே தவிர, பிள்ளைகளின் அறிவின் வளர்ச்சிக்கும் கைத்தொழில் வியாபாரம் முதலிய கலைகளின் பழக்கத்துக்கும், இடங்கொடாமலும் ரஸாயனம் முதலிய தேசத்தின் செல்வ வளத்தையும் விருத்தி செய்யக்கூடிய மார்க்கங்களில் குழந்தைகள் மனதைச் செலுத்தும்படி செய்யாமலும் தேசத்துக்குத் தீங்கிழைக்கிறார்கள்.

இங்கிலீஷ்பாஷை ராஜபாஷையா யிருப்பதாலும், கவர்ன்மெண்டு உத்தியோகம் முதல் சாதாரண வியாபாரம் முதலிய சகல தொழில்களுக்கும் இங்கிலீஷ்பாஷை தெரிந்திருக்க வேண்டுவது அவசியமாயிருப்பதாலும், இங்கிலீஷ் படித்து பட்டம்பெறுவதை, நாம் மறுக்கவில்லை. ஆயினும் கலாசாலையில் படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் கவர்ன்மெண்டு உத்தியோகம் சம்பாதித்துக் கொடுக்க முடியுமா? ஒரு குடும்பத்தில் சுமார் 7. குழந்தைகள் இருப்பதாய் வைத்துக்கொள்வோம், 1-வது குழந்தை குடும்பக் காரியத்தையும், 2-வது குழந்தை வியாபாரத்தையும், 3-வது குழந்தை விவசாயத்தையும், 4-வது குழந்தை கைத்தொழிலையும், 5-வது குழந்தை ரஸாயன சாஸ்திரத்தையும், 6-வது குழந்தை உபாத்திமைத் தொழிலையும், 7-வது குழந்தை கவர்ன்மெண்டு உத்தியோகத்தையும், வகிப்பது ஞாயமென்றும், தேசத்தின் நன்மைக்கும் குல நன்மைக்கும் ஒத்ததென்றுஞ் சொல்லலாம். அப்படியின்றி எல்லாக் குழந்தைகளும், கவர்ன்மெண்டு உத்தியோகத்துக்கென்று படித்து பரீக்ஷைதவறி, மற்றத்தொழில்களைச் செய்யவும் மனவெழுச்சியில்லாமலும்,பாஸ்செய்தாலும்உத்தியோகம் கிடைக்காமலும் கிடைத்த உத்தியோகத்தைச் சரிவர உபயோகிக்க முடியாமல், திண்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

டாடி மதிப்பையிழந்தும், அல்லது புத்தகப்பூச்சிகளாய் பிறர் சொல்வதைக் கிரஹிக்க முடியாத புத்தியுள்ளவர்களாயும். பிறருடைய உணர்ச்சியையும், துன்பத்தையும், மதியாத வர்களாய் கேவலம் பரீக்ஷைக்காகத் தங்களுடைய மூளையை உருக்கிப்படித்து B. A. M. A. முதலிய பட்டங்களைப்பெற்று, உத்தியோகத்தி லமர்ந்தும், பணம் பணம் என்று பேராசைபிடித்து லஞ்சம்வாங்கி, வழக்கோரஞ் சொல்லியும் இன்னும் பலவித அட்டூழியங்களைச் செய்து, அரசருக்கும் குடிகளுக்கும் தீங்கிழைப்பதைப் பார்க்கினும் சொற்பமாக தேச பாஷையைப் படித்து தன்குடும்பக் கடமையை நிறைவேற்று வார்களானால் பிறர்க்குத் தீங்கில்லாமல் நன்மை யுடையோராய் வாழலாமன்றே.

கவர்ன்மெண்டு உத்தியோகமோ மிகவும் பொறுப்புடையதும், கொஞ்சந்தவறினும் அநேக நன்மைகளைக்கெடுத்துத் தீங்கு விளைவிக்கக் கூடியதுமான தொழில். இதில் பழகுவோர் தெய்வ சிந்தனை யுள்ளவர்களாயும், மனத்தூய்மை யுள்ளவர்களாயும், தன்னுயிர்போல் மன்னுயிரையும் பாதுகாக்க வல்லோராயும், சத்தியத்தின் நம்பிக்கையும் மனவுறுதியு முடையோராயும், தீமையை யொழிப்பதற்கு தமதுயிரைக் கொடுக்கத் துணிவோராயும், கண்ணோட்டமும் பிறர் சொல்லும் பொழுதே அவர்கள் மனஞ்செல்லும் வழியை அறிந்துகொள்ளக் கூடியதிறமையும், நுட்பபுத்தியு முள்ளவராயும், தருமத்தைக் கடைப்பிடித்து பிறர் பொருளுக்கும் பிறர் புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் மயங்காது, பொறுமை யுடையோராய் தன் கடமையையே பெரிதென மதித்து கருமமே கண்ணாயிருக்கிறவர்களா யிருக்கவேண்டும்.

மேற்கண்ட குணங்கள் அமைந்த குழந்தைகளாய் நமது குடும்பத்தில் பதினைந்து குழந்தைகளிருந்தாலும் அவ்வளவு குழந்தைகளுக்கும் உத்தியோகங் கிடைக்கவேண்டிய கல்வியையையே பயிற்றுவித்து உத்தியோகத்தில் அமரும்படி செய்யப் பிரயாசைப்படுவோமானால், அது நமது குலத்துக்கும் தேசத்துக்கும் நன்மையையேதரும். அப்படிக்கின்றி மேல்கண்ட குணங்களுக்கு நேர்மாறாக இருக்கும் குழந்தைகளுக்கு உத்தியோகம் சம்பாதித்துக் கொடுக்குங் கல்வியைப் பயிற்றுவித்து உத்தியோகமும் கிடைத்துவிடுமானால், அதுபோல் குடும்பத்துக்கு நாசத்தை விளைவிக்கக் கூடியதும், அபாயஹரமானதும் உலகத்திலொன்றுமே கிடையா தென்னலாம்.

ஆகையால் நம்முடைய குழந்தைகளுக்குப் போதிக்கும் கல்வியானது, தேசத்துக்கும் குடும்பத்துக்கும் தேவையானதாகவும், குழந்



தைகளின் அறிவை (ஞானம்) வளர்ப்பதற்கு ஆதாரமானதாயும், அந்தந்தக் குழந்தைகளின் இயற்கையறிவு எந்தத் தொழிலில் அதிகப் பிரியத்துடனும் உற்சாகத்துடனும் செல்கிறதோ அதைக் கண்டுபிடித்து, அது பாபமற்றதாயும் உலகத்துக்கு தீங்கு செய்யாததாயும் இருந்தால் அதனை விருத்திசெய்து வைக்கவேண்டும்.

சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு தாங்கள் செய்கிற வியாபாரமோ, மற்றத் தொழிலோ நடத்துவதற்கு போதுமான கல்வியிருந்தால் போதுமென்று விசேஷ அறிவுடைய பிள்ளைகளையுங் கூட மட்டந்தட்டி வைத்துவிடுகிறார்கள். இது மிகவும் பரிதபிக்கக் கூடியகாரியமே.

"தொட் டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்தூறும் அறிவு" என்ற

தெய்வப்புலவர் திருவாக்கின்படி, மணற்கேணியானது தோண்டத்தோண்ட நீர்ச்சுரப்பு வேகமாய் வருவதுபோல், கல்வியானது எவ்வளவுதூரம் விரும்பிக் கற்றோமோ அவ்வளவுதூரம் அறிவை வளர்த்து மனிதனை புனிதனாக்குகிறது, அப்பேர்பட்ட கல்வியை வளர்ப்பதற்கு அநுகுணமாய் பூர்வசென்மத்திலேயே பண்படுத்தப் பட்ட குழந்தைகளின் அறிவு பெற்றோர்களுடைய அஜாக்கிரதையால் மருமலர்ச்சி யடைவதற்கு வழியில்லாமல் போனால் மஹா பாதகங்களெல்லாம் வந்து சேரும்.

ஏனெனில் உலகத்தில் தோன்றுகிற ஒவ்வொரு ஜீவராசிகளும், தன்னுடைய ஜென்மத்தை மேன்மைப்படுத்தி உயர்வடைந்து சாக்ஷாத் ஜெகதீசனை யடைவதற்கே பல சரீரங்களையும், அடைந்து முயற்சித்துக் கொண்டிருக்கிறது. எந்த மனிதனாயினுஞ்சரி. இதர ஜீவராசிகளுஞ்சரி. தான் கெட்டுப்போக வேண்டுமென்ற உணர்ச்சியை கைக்கொள்வதேயில்லை. ஒவ்வொரு ஜீவராசியும் தற்பொழுதிருக்கும் நிலையைவிட மேலான நிலைமையடையவே முயற்சிசெய்து கொண்டிருக்கிறது. நாம் கொஞ்சநேரம் நிர்மலமான சித்தத்துடன் இதையோசித்துப் பார்ப்போமானால் இந்த நோக்கம் ஒவ்வொரு ஜீவராசிகளுக்கும் இருப்பதாலேயே உலகம் நடைபெறுகிறதென்றும், இந்த உணர்ச்சியே சண்டைக்கும் சமாதானத்துக்கும் காரணமென்றும், இந்த உணர்ச்சியே ஒன்றுக்கொன்று ஒத்தாசையாய் அநேக சக்திகளுக்கு வேலை

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

யிட்டுக் கொண்டிருக்கிறதென்றும், இந்த உணர்ச்சியே நல்லுணர்வையும் அன்பையும் வளர்க்கிறதென்றும் கண்டுகொள்ளலாம். நம்முடைய தாய்தந்தையர் நாம் உயர்ந்த நிலையையடைவதற்கு எவ்வளவு உழைப்பும் ஆசையுங் கொண்டார்களோ அதைப் பார்க்கிலும் பிதா சத்குணம் புத்திரர் என்ற வாக்கியப்படி நமது பிதாவைப்பார்க்கிலும் நாம் நூறுமடங்கு முயற்சிசெய்து துஷ்டக் குழந்தைகளா யிருந்தாலுங் கூட மனஞ்சலியாது நம்மால் எவ்வளவு கல்வி கற்றுக்கொடுக்க முடியுமோ அவ்வளவுங் கற்றுக்கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் நன்றி கெட்டவர்களென்று யேற்படாமல் நமது கடமையைத் தெரிந்து செய்தவர்களாவோம்.

(இன்னும்வரும்) A. C. பாண்டியன்.

---

## தாய்க்கும் பிள்ளைக்கும் சம்பாஷணை.

தாய்:—அருமைக் குழந்தாய், நீ இந்த வயதிலேயே பள்ளிக்கூடத்திற்கு போனாலல்லவோ பிற்காலத்தில் மேன்மையாகவும் சுகமாகவும் வாழலாம்.

பிள்ளை:—அம்மா, பள்ளிக்கூடத்திற்கு இனிநான் போகமாட்டேன். உபாத்தியாயர் என்னை அடிக்கிறார் திட்டுகிறார்.

தாய்:—அப்பா, உபாத்தியாயர் உன்னை திட்டுவதற்கும் அடிப்பதற்கும் காரணம் உன்னுடைய சோம்பேரித் தனத்தாலும், கெட்ட பழக்கத்தாலு மல்லவா?

பிள்ளை:—அம்மா, நீ என்ன உபாத்தியாருக்குமேல் திட்ட வருகிறையே, படிக்காவிட்டா லென்ன? சம்பாதிக்க முடியாதா? பிழைக்க முடியாதா?

தாய்:—மகனே, படிப்பில்லாத சம்பாத்தியமும்பிழைப்பும் நேத்திரமற்றவர் அனுபவிக்கும் சுகத்தை யொக்கும்.

பிள்ளை:—அம்மா, நீ சொல்வதென்ன ஆச்சரியமா யிருக்கிறது. நம் நாட்டிலே படிக்காதவர்கள் சம்பாதிக்கவில்லையா? மாடிவீடுகள் கட்டவில்லையா? விவாகங்கள் செய்யவில்லையா? சுகமாக வாழவில்லையா?

தாய்:—அடே போதும்போதும், வாயைமூடு. உன்னுடைய புத்தியைக் கேட்டால் பெரிய மனுஷராகிவிடலாம். "அடித்து வளர்க்காத பிள்ளையும், முருக்கி வளர்க்காத மீசையும்" என்றாற்போல்



இளமையிலேயே உன்மனம்போல விட்டபடியா லல்லவோ இப்பேர்ப்பட்ட வார்த்தையாட வந்தாய். உன் முன்னோர்களால் கண்டும் கேட்டுமிராத நாகரீகத்தை கற்றுகொண்டாய். பீடி சிகிரெட்டுபிடிக்கிறாய். கணுக்கால்மறைய நம்பர் மல் வாங்கிக் கட்டிகொள்ளுகிறாய். சிகையை (கிராப்) வெட்டிக் கொள்வதற்கு மாதம் எட்டணா கொடுக்கிறாய். சீட்டுக்கட்டை தொடாம லிருப்பதில்லை என்ற விரதத்தை கொண்டிருக்கிறாய். நித்திரைக்குக் கேடான நாடகம் பார்ப்பதையும் நிறுத்த முடியவில்லை. இனிமேல் நான் என்னசொல்லப் போகிறேன். மகனே, நம் நாடு செழித்தோங்கவும் நமது குலம் முன்னேற்றமடையவும், கல்வி வியாபாரம் கைத்தொழில் விவஸாயம் முதலியன விருத்தியாதற்குரிய புத்திரனை; நம் நாடார்குல மித்திரனை, ஸ்ரீ மீனாக்ஷி சுந்திரேஸ்வரர் நமக்காகவித்துவ சம்பன்னரான ஸ்ரீமான் சூ. ஆ. முத்து நாடாரவர்கள் விற்பன்ன கெற்பத்தி லுற்பத்தி செய்தனர்போலும். ஆதலால் நம்நாடும் நங்குலமும் மேன்மையாதற்குச் சிறிதுஞ் சந்தேகமில்லை. நீயும் உனது சிநேகிதர்களும் நம் நாடார் குல மித்திரனை அன்பினால் கட்டியணைத்து ஆதரித்து வருவீர்களாயின், உங்களுக்கு உயிர்த்தோழனாகவே விளங்குவான் என்பது திண்ணம்.

அ. மு. கோபாலசாமி நாடார்.
மன்னார்குடி.

---

## இலங்கை வர்த்தகம்.

இலங்கை தேசமானது, இந்தியாவைச் சார்ந்த ஓர்சிறு தீவேயாயினும், நீர்வள நிலவள விசேடத்தாலும், வர்த்தகச் சிறப்பினாலும், செல்வமிகுந்த வோர் நாடாயிருக்கிறது, இத்தீவின் தலைநகராகிய கொளும்புமாநகரம், அதன் செல்வச் செறுக்கால் "குபேரப்பட்டண" மென்றழைக்கப் படுகிறது. இவ்வூரில் பல வியாபாரங்களையும்விட, அரிசிவர்த்தகமே அதிசிரேஷ்டமானது. ஒவ்வொரு தெருக்களிலும், வியாபாரிகள் தங்களுக் கிஷ்டமான கடைகளில் வைத்து அரிசி வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. கவர்ன்மெண்டாரால் அரிசி வியாபாரத்திற்கென்று பிரத்யேகமான இரண்டுபெரிய மார்க்கெட்டுகள்கட்டப்பட் டிருக்கின்றன. அவற்றுளொன்று 'சாமர்ஸ்கிரனெறி'

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

(Chalmers Granaries) என்றும், மற்றொன்று மான்னிங் அரிசி மார்க்கெட் (Mannings Rice markets) என்றழைக்கப் படுகிறது.

முதற்கூறிய மார்க்கெட்டில் 119-பெரிய ஸ்டோர் அறைகளும், மான்னிங் மார்கெட்டில் 70-ஸ்டோர்களும் கட்டப்பட் டிருக்கின்றன. சாமர்ஸ் கிரனெரியிலுள்ள வியாபாரிகளெல்லாம் விசேஷமாய் செட்டிமாரும், ஷேட்மாரும், மற்ற முகம்மதியர்களுமே. அவர்களெல்லாரும், இரங்கூன், அக்யாப், கல்கத்தா, கராச்சி, முதலிய விடங்களிலிருந்தும், தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்தும் நேராக அரிசி தருவிக்க லைசென்ஸ் பெற்றவர்கள்.

அவர்களிர் சில்லரை விற்பனை கிடையாது. மார்னிங் மார்க்கட்டிலுள்ள வியாபாரிகள் பூராவும் திருநெல்வேலி ஜில்லாவாசிகளான பிள்ளைமார்கள் இவர்கள்நேராகதருவிக்கக்கூடாது.சாமர்ஸ்கிரனெரியில் கொள்முதல் செய்கிறார்கள், இவ்விரு மார்க்கட்டிலும் நாடார்களுக்கு ஸ்டோர் கிடையாது. இந்தியாவிலுள்ள பிரபல வர்த்தகர்களாகிய நங்குல கனவான்கள் இது விஷயத்தைக் கவனிக்கவேண்டியது அத்யாவஸ்யமாகும் கல்கத்தா, இரங்கூன், கராச்சிமுதலிய விடங்களில் பிராஞ்ச் ஆபீஸ் உடையவர்களுககு இவ்வூர் அரிசி வர்த்தகம் நிரம்ப ஸவுகர்யம்.

இலங்கை வாசிகளான சிங்களவரும், சோணகரும், ஐரோப்பா அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா முதலிய தூரதேசங்களோடு செய்துவரும் வர்த்தகமானது நாளுக்குநாள் அபிவிர்த்தி யடைந்து வருகிற இக்காலத்தில், நம்மவர்களுக்கும் படிப்படியாய் அயல்தேச வர்த்தகத்தைக் கைக்கொள்வது பொரு ளபிவிர்த்திக்கோர் தகுந்த ஸாதனமாகும். இவ்வூர் இதர வியாபாரங்களைப் பற்றி மறுமுறை யெழுதுவேன்.

கெ. கலியாண சுந்தரம்.

## கற்கை நன்று.

வறுமையை ஓட்டவும், வல்லமையைக் கூட்டவும், பொறுமையைப் புகட்டவும், புகழ்நிலை நாட்டவும், கல்வியே சிறந்ததெனக் கனதனவான்க ளறிந்த விஷயம்.



ஆயினும், அக்கல்வியுள் பாஷைபல உள. அவற்றில், தமிழில் பாண்டித்தியம்பெற்று, தமிழ்நாடெனப் பேறோங்கச் செய்த தமிழரசர் காலத்தில், தமிழா லுயர்ந்து, அரசன் புகழிலும் அதிபுகழ் பெற்றோரநேகர்.

இக் காலத்தில் தமிழ் மாத்திரமன்று, முப்போது நிகழும் அரசுரிமைக்குரிய ஆங்கிலத்தையுங் கற்றுக்கொண்டால், கற்றவர்பெருமை கொற்றவர்க்கில்லை யென்று ஒளவைத்தாய் சொல்லியது அகத்திற் செனிக்குமென்பதற் கையமில்லை.

இக் கருத்தறிந்த நம் நாடார்குலத்திற்கு வாடாத செல்வத்தை நீடுகாலங்கொண்ட வீடார் விருதை, திருநல்லூர், மதுரை, கடம்பூர், இன்னும் அநேக நகர்வாசிகள் குல முன்னேற்றங்கருதி ஏற்படுத்தியிருக்கும், ஸ்கூல்கள்,

ஏற்றதலத்திற் கேரும் ஏணியாகும்
ஆற்றைக்கடக்க வருந்தோணியாகும், என்பதற்

கையமில்லை. என்றறிந்தஎன்மனம் நித்திய புழுக்கத்திற் குள்ளாயிற்று.

ஆயினும், நம்குலத்தவர் வசிக்கும்நகர்தோறும் பகைமை பாராட்டாமல் பண்டுகளை யொழுங்காய் நடாத்தி, அப்பண்டிலிருந்தே நம்குல மித்திரனை வருந்திக்கண்டு பேசிக் கொள்வதோடு ஆதரிப்பதே முக்கிய கடமையாகும்,

மனத்திலும், தனத்திலும், இனத்திலுஞ்சிறந்த எங்நகர், பல்விடமூர்ந்தும், கல்வியிற் றேர்ந்தும், சொல்லரிய பகைமைக்கு நல்லிடமாயிருக்கிறது. என்ன விபரீதகாலமோ, இவ்விபரீதம் நீங்க, சதானந்தச்சபை இதமாயெழும்பினால், அதுவே ஓட்டும் அநேக பகைமையை யென்றெதிர்பார்க்கிறேன். அத்தன்கிருபை நித்திய மங்களம்.

விந்தையில் விந்தை, தூத்துக்குடியில் வர்த்தகஞ் செய்யும், எங்குல தனவான்கள் நங்குல முன்னேற்றங்கருதி வேண்டிய முயற்சி செய்யாமல் சுயநலங்கருதி பாராமுகமா யிருப்பதும் பிராரதத்துவமே.

ஆயினும், நமது 6-வது கான்பரன்ஸை வரவேற்கும் திருமந்திர நகர், கூடிப்பிரியேல் என்றதன்னி ஒத்துழைத்து கான்பரன்ஸோடு ஐக்கியப்பட்டு வேண்டிய ஒத்தாசைக்கு வித்தாய் விளங்குமென்று என்சித்தம் அத்தனை நாடிக்கொண் டிருக்கிறது. கனவான்களே, முன்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

னூலைப் பின்தள்ள வொட்டாமல் பன்னூலுக்குஞ் சிரந்த என்னூலே சன்னூலென உரைத்த பொய்யாமொழிப் புலவரை நாம் மரக்கவுங் கூடாது. கற்கக்கசடற கற்பவை கற்றபின்நிற்க அதற்குத்தக. என்று ஆனதால், கல்விநடைகொடையா லுயரவேண்டும். இப்போது தேட மல்கிடைத்த நமது நாடார்குல மித்திரனுக்கு விஷயஞ்செய்து ஆத ரிப்பதே அறிதான கொடையாகும். சஞ்சிகைவருத்தி எஞ்ஞான்று பார்ப்பவரே மிஞ்சிய கல்விமா னாகுவார். அதன்படி யொழுகுபவரே அத்தனடை யொத்தபத்த னாகுவர். குலமித்திரா,

கல்வியே நல்லுயிரைக் காப்பதற்கு நற்றுணையாம்
கல்வியே நல்லுடம்பைக் காப்பதாம்—கல்வியே
செல்வப் பொருளின்பஞ் சேர்க்குந் தலைமைசேர்
செல்வமாஞ் செய்யுஞ் சிறப்பு என்றும்,

மனைக்கு விளக்க மடவாள் மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர்—மனைக்கினிய
காதற் புதல்வற்குங் கல்வியே கற்றங்
கோதிற் புகழ்சா லுணர்வு. என்றும்,

கலைமகள் வாழ்க்கை முகத்ததெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றவஞ் செய்யு முடம்பு, என்றும்

வெள்ளத்தாலழியாது வெந்தணலால் வேகாது வேந்தராலுங்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவின்றிக் குறைவிறாது
கள்ளற்கோ பயமில்லை காவலுக்கோ மிகவெளிது கல்வியென்னு
முள்ளபொரு ளுள்ளிருக்கப்புறம்பாகப் பொருள்தேடியுழல்கின்றீரே.

என்றும், இவ்வாறு நம்முன்னோர்கள் கடலினும் பெருக்கமாய் விஸ்தரித்துரைத்த கல்வியைநன்குணர்ந்த யென்னண்பர்களுக்கு விரித் துரைக்க விருப்பமன்று. தாண்டவம்புரிந்த ஆண்டவனருளால் வேண் டிய கல்வியில் பாண்டித்தியம் பெருவரென் றறிந்தயான், சுருக்கிக் கூறலானேன். மித்திரா! உனக்கும், உன் அங்கத்தினருக்கும், உன் சந்தாநேயருக்கும், எந்நன்றி இந்நன்றி என்றைக்கும் பொன்றுதிருக்க.

ப. சி. பொன்னம்பல நாடார்.
கீழையூரால்.



## சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

நம்மித்திரன் வெளிவந்த நோக்கத்தைப்பற்றி முன்னமே அறி வித்துள்ளோம். சந்தா நேயர்களில் சிலோன்வாசிகளும் இந்தியாவிற் சிலருக்குந்தவிர, மற்றனேகருக்கு ஆர்டரில்லாமலே, அவரவர்களு டைய அந்தஸ்த்தை உத்தேசித்துப் பெருந் தன்மையுடன் பத்திரிகை அனுப்பிவந்தோம்.

சிலர்முதலாவது பத்திரிகையைப் பார்த்துவிட்டு, இரண்டாவது பத்திரிகையைத் திருப்பிவிட்டார்கள். இதனைஅவர்கள் உள்ளக்குறிப் பைத் தெள்ளிதி னுணரச் சமயம் வாய்த்ததென்றே பன்முறை வந் தனத்துடன் ஏற்றுக் கொண்டோம்.

சிலர் 1, 2, பத்திரிகைகளையும் பெற்று, 3-வது வி. பி. அனுப் பும்போது திருப்பிவிட்டார்கள். இதனால் வீணாக ஸ்டாம்பு நஷ்ட முண்டாகின்றது. இவர்கள் குலாபிமானத்தைக் குறித்தாவது ஒப்புக் கொள்ளும்படி, மறுமுறையுங் கேட்டுக் கொள்கின்றோம். அல்லது ஒப் புக்கொண்ட பத்திரிகையின் கிரயங்களையாவது தபால்மூலமாக அனுப்பி ஆதரிக்கும்படிக் கோருகிறோம்.

மித்திரன் பிறந்து ஓராண்டு முடிந்தவுடன், இந்நகரில் ஓர் அச் சாபீஸ் வைத்து, மித்திரனை மாதமிருமுறையோ, வாரமொருமுறை யோ, பதிப்பிக்க உத்தேசித்திருப்பதால், ஒவ்வொருவரும் தங்களா லான உதவிசெய்யப் பின்வாங்க மாட்டார்களென்று நம்புகின்றோம்.

இம்முறை இரண்டு கனவான்கள் புதிய போஷகராக முன்வந் திருப்பதை நேயர்களறியலாம். இப்படியே மற்றுமுள்ள கனவான்க ளனைவோரு முன்வந்து ஆதரிக்கக் கோருகின்றோம், பலதுளி பெரு வெள்ளம் என்றபடி ஒவ்வொரு சந்தா நண்பர்களும், கூடியவரை பிரயாசை யெடுத்துப் புதிய சந்தாதார்களைச் சேர்த்தனுப்புவார்க ளாயினும், மிக்க ஆதரவா யிருக்குமென்பதை ஞாபகப் படுத்துகின் றோம்.

அடுத்த மாதத்துக்குள்ளாக சந்தாப் பணங்களை மணியார்டர் மூல மனுப்டாதவர்களுக் கெல்லாம், வி. பி. மூலமாக அனுப்பப்படும். திருப்பி யனுப்பாமல் விருப்பமுடன் பெற்று, மித்திரனை சிறப்பிக்கும் படிக் கேட்டுக் கொள்கின்றோம்.

பத்திராதிபர்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## மித்திரனுக்கு வேண்டிய தென்ன?

நம்மால் எவ்வகையிலும் தகுந்த வாறுதவிசெய்ய முடியாத பேருதவியை நமக்குச் செய்வார்கள் பலருண்டு. அத்தகையோரில் நம் மித்திரன் ஒருவனைச் சிறியோர்களும் பெரியோர்களும் ஆக பத்துலட்சம் ஜனத்தொகைகொண்ட நம்மித்திரன் இவ்வளவு குறைந்த சிநேகிதர்களோடே, தன்னால் இயன்றளவு தன் சிநேகிதர்களுக்கு சென்றநான்கு மாதங்களாக நம் குலாசார சீர்திருத்தங்களை எவ்வளவு பொருட்சுவையுடன் அளித்து வருகிறான். இம்மித்திரனை நாம் ஒவ்வொருவரும் அன்புடன் மாதந்தோரும் வரவேற்கிறோம் என்றும், அவன் கோரும் சிறியதோர் உதவியை நம்மால் செய்யக் கூடியதா யிருந்தும் செய்யாமலிருக்கிறதும் தகுதியல்ல. மேலும் நம்மித்திரன் இவ்வளவு சொற்ப சிநேகிதர்களோடே இன்னும்தனக்கு சிநேகிதர்களாகிய சந்தாதார்களை சேர்த்து, வைக்கும்படி மாதாமாதம் குறைகூறி வருகிறான். அவன் மனம்திருப்தியடைய நாம் உதவிசெய்யாமல், அவனால்மட்டும் மாதந்தோறும் நாம் மாத்திரம் சந்தோஷத்தை அனுபவித்து வருகிறது தகுதியல்ல. எனென்றால் நாம் செய்யப்போகும் இவ்வுபகாரம் நம் மித்திரனுக்கென்று கருதப் படுவதாலும், உண்மையில் அது நமது சகோதரர்கள் அபிவிருத்திக்கும் நம் நாட்டின் க்ஷேமத்திற்காகவும், செய்யும்பொது நல கைங்கரியமாகிய பெரும் புண்ணியச் செயலே ஆகும், ஆகையால் அத்தகைய அவசியமான உதவியைச் செவ்வனே செய்யவேண்டியது நமது கடமையல்லவா? மேலும்நாம் செய்யவேண்டிய தென்னதென்று கூறுவோம், மித்திரன் வேண்டிக் கொள்ளும் உதவியோ அதிக பெரிதல்ல. சிறியதோர் உதவியைத்தான் வேண்டுகின்றான். சந்தாதாரராகிய நாம் ஒவ்வொருவரும் செய்துகொடுக்க வேண்டும். இம்மித்திரன் வேண்டிக் கொள்வது தனக்கு இப்பொழுது இருப்பதைவிட இன்னும் அநேக சகோதரர்கள் வேண்டும் என்பதே மித்திரனுக்கு நாம் ஒவ்வொருவரும் சந்தாதாரர்களை சேர்த்து வைப்பது ஒரு பெரியகாரிய மல்லவே. இவ்வுதவியை செய்து மித்திரனைச் சந்தோஷப்படுத்த எல்லோரும் முன்வர வேண்டும் என்பதே தனது பிரார்த்தனை, ஆகையால் எம்குல கனதனவான்களே! நம் மித்திரனிலிருந்து வெளிவரும் அரியபெரிய விஷயங்களையும் நம் சகோதரர்களபிவிருத்தியையும் நம்நாட்டின் முன்னேற்றத்தையும் உத்தேசித்து ஒவ்வொருவரும் எம்குல பிரபுக்களாகிய நீங்கள் நமது மித்திரன்



# நாடார் குலமித்திரன் அநுபந்தம்.

### நாடார் மகாஜன சங்கம் மானேஜர்

### Mr. P. பழனிவேல் நாடார் (B. A.) அவர்கள் எழுதியது.

---

## புதிய சென்னைமாகாணச் சட்டசபை

இதுவரையிலும் நமது மாகாணச் சட்டசபைக்கு மெம்பர்கள் இரண்டுவிதமாய் சேர்க்கப்பட்டனர். முதலாவது "எலக்ஷன்" அதாவது ஜனங்களால் தெரிந்தெடுக்கப் படுதல். இரண்டாவது "நாமினேஷன்" அதாவது கவர்னர் அவர்களால் நியமனம் செய்யப்படுதல் இம்முறைகளை யனுசரித்து வருங்காலத்தில்; நமது மகமதிய சகோதரர்கள் அவர்களது ஜனத்தொகைக்குத் தக்கவாறு எலக்ஷன் மூலமாய் சட்டசபையில் ஸ்தானம் பெற முடியாமல் போயிற்று. மகமதியர்களது குறைகளை யெடுத்துப்பேச மகமதிய பிரதிநிதிகளில்லாதது பெருங்குறையா யிருந்தது. இதுகாரணம்பற்றி மகமதியர்களெல்லாரும் 'காங்கிரஸ்'மகாசபையினின்று பிரிந்து முஸ்லீம்லீக்' என்னும் மகா சபையை யேற்படுத்தி அதின்மூலமாய் தங்கள் குறைகளை கவர்ன்மெண்டுக்குத் தெரிவிப்பதுடன் தங்களுக்கு பிரத்தியேகமாய் சில ஸ்தானங்கள் எல்லாச் சட்டசபைகளிலும் ஒதுக்கிவைக்கப் படவேணுமென்றும், மகமதியர்களுக்கு ஷை ஸ்தானத்துக்கு மெம்பர்களைத் தெரிந்தெடுக்குஞ் சுதந்தரம் கிடைக்க வேண்டுமென்றும், கிளர்ச்சிசெய்து வந்தநிமித்தம் அவர்களுக்குத் தனியாக சிலஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப் பட்டு வருகின்றன.

எலக்ஷனில் வெற்றிபெற முடியாத வகுப்பினர்க்கு கவர்னர் அவர்கள் நாமினேஷன் மூலமாய் தானங்கள் அளித்து வருகின்றனர். நாட்டுக்கோட்டை செட்டியார்களுக்கும், ப்ராட்டஸ்டண்டு கிறிஸ்தவர்களுக்கும், ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவர்களுக்கும், ஆங்கிலோ இந்தியர்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் இங்கிய மனஸ்தானங்கள் கிடைத்திருப்பது யாவரும் அறிந்தவிஷயம். நாடார் குலத்தவராகிய நம்மில் சுமார் 7-லக்ஷம் பேர்கள் இருக்கிறார்கள், ஜனத்தொகையிலும் செல்வாக்கிலும் நம்மிலும் குறைந்தவர்களுக்கு ஸ்தானம் கிடைத்திருக்கையில் நமக்குக் கிடையாமல் போனது நமது பாக்கியம்தான்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

கக்ஷியாளர் தோன்றினர். இக்கக்ஷியினர் நமது சென்னை மாகாணத்தில் மாத்திரமே விசேஷமாய்த் தோன்றினர். இவ்விருகக்ஷிக் காரர்களும் வெகுபலமாய் விவாதம் செய்தனர்.

இத்தருவாயில் ஐரோப்பாக் கண்டத்தில் நடந்த மகாயுத்தத்தில் நமது தேசம் லக்ஷக்கணக்கான வீரர்களையும் கோடிக் கணக்கான திரவியத்தையும் இங்கிலாந்துக்குக் கொடுத்துதவியதற்கு கைமாறாக சிலபுதிய சுதந்தரங்களை இந்தியாவுக்குக் கொடுக்கும் நோக்கத்துடன் நமது ராஜப்பிரதிநிதியாகிய செம்ஸ்போர்டு பிரபு அவர்களும், இந்தியா மந்திரியாகிய கனம் மாண்டேகு அவர்களும் செம்ஸ்போர்டு மாண்டேகு சீர்திருத்த மசோதாவென்ற நாமத்தையுடைய மசோதா ஒன்றை வெளியிட்டார்கள். இம்மசோதாவைச் சட்டமாக்குவதற்காக 'ஜாயிண்ட்கமிட்டி' கூட்டுக் கமிட்டியார் இங்கிலாந்தில் விசாரணை செய்தனர். இக்கமிட்டி முன் சாக்ஷியம் சொல்வதற்காக நமது தேசத்திலுள்ள ஒவ்வொரு கக்ஷியின் பிரதிநிதிகளும் ஏராளமான திரவியத்தைச் செலவுசெய்து கொண்டு இங்கிலாந்துக்குச் சென்று சாக்ஷி கொடுத்துவிட்டு இப்போதுதான் திரும்பி வந்தனர்.

கூட்டுக் கமிட்டியார் மேற்கூறிய சாக்ஷிகளை விசாரித்ததின் பயனாக மசோதாவில் மாறுதல்கள் செய்து, பார்லிமெண்டு சபையில் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த மசோதா சமீபத்தில் சட்டமாய் விட்டது. இச்சட்டம் அடுத்தவருடம் அமுலுக்குக் கொண்டுவரப்படும். இச்சட்டத்துக்கிணங்க புதியமாகாணச் சட்டச்சபைகளும் ஏற்படுத்தலாகும். இச்சபையில் மெம்பர் ஸ்தானங்கள் அதிகப்படுவதுடன் மெம்பர்களைத் தெரிந்தெடுக்கும் ஓட்டர்களின் தொகையும் அதிகரிக்கும். யார் யார் 'ஓட்' கொடுக்கும் பாத்தியதை யுடையவர்களென்பது பின்னடிக் தெரிவிக்கப்படும்.

இப்புதிய சட்டசபையில் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்படும் ஸ்தானங்களும் நாமிநேஷன் ஸ்தானங்களும் நீங்கலாக, மற்றஸ்தானங்களில் சில பிராமணரல்லாதாருக்கென்றே ஒதுக்கிவைக்கப்படும். (இதன் எண்ணம் இன்னும் நிர்ணயிக்கப் படவில்லை) இந்த ஸ்தானங்களுக்காக பிராமணர்கள் எலக்ஷனில் அபேக்ஷகராக நிற்கமுடியாது. மீதியான மற்றஸ்தானங்களுக்காக பிராமணரும் பிராமணரல்லாதாரும் அபேக்ஷகராக நிற்கலாம்.



நம்மவருள் ஒருவரை சட்டசபையில் நியமனம் செய்யும்படி கவர்னர் அவர்களுக்கு தீர்மானங்கள் மூலமாய் பலதடவை தெரிவித்துக் கேட்டுக்கொண்ட போதிலும் நமது வேண்டுகோள் கவனிக்கப்படவில்லையென்பது விசனிக்கத்தக்க விஷயம். இத்தகைய நிலைமைக்குக் காரணம் யாது? நாம் இதுகாறும் நமது ராஜாவிசுவாசத்தை எப்போதும் விளம்பரம் செய்துகொண்டு கவர்ன்மெண்டாரைத் துதித்துக் கொண்டு வந்தமையால், நமக்கு யாதொருகுறையு மில்லையென்று அவர்கள் ஒருவேளை நினைத்திருக்கலாம். அல்லது சுமார் 7-லக்ஷம் ஜனத்தொகை யுள்ளதும் ஏராளமான வரியைக் கவர்ன்மெண்டுக்குச் செலுத்துவதுமான நமது வகுப்பு ஒன்று இருக்கிறதென்று அவர்களுக்குத் தெரியாம லிருக்கலாம். இக் காரணம்பற்றியே நாடார் மஹாஜன சங்கத்திலிருந்து மாண்டேகு பிரபு அவர்களுக்கு அனுப்பிய பெட்டிஷனும் ராஜப்பிரதிநிதி செம்ஸ்போர்டு பிரபு அவர்களுக்கு அனுப்பிய வந்தனோபசார பத்திரிகையும் அங்கீகரிக்கப்படவில்லையென்று நம்புவதற்கிடமா யிருக்கிறது.

நாமே நமது நிலைமைக்குக் காரணமென்று சொல்லத்தகும். "அழுத பிள்ளைதான் பால்குடிக்கு மென்பதும், கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சி" யென்பதையுங் நாம் அறிந்திருக்கும், ராஜீயக்கிளர்ச்சிகளில் எதிலாவதுநாமும் சம்பந்தப்பட்டு, கவர்ன்மெண்டார் காதில் படும்படி கூக்குரலிடாமல் போனது நமது குற்றம். எக் கக்ஷியிலாவது சேர்ந்து உழைத்திருப்போமானால் இதுவரையில் நமக்கு ஒருஸ்தானமாவது கிடைக்கும்.

மகமதிய சகோதரர்களுக்கு பிரத்தியேக ஸ்தானங்கள் விலக்கப்பட்டு அவர்கள் விலகிக்கொண்ட சில வருடங்கள் கழித்து, பிராமணரல்லாதார் ஒரு கிளர்ச்சி யாரம்பித்தனர். பிராமணர்களே எலக்ஷன் மூலமாய் எல்லா ஸ்தானங்களையும் கைப்பற்றிக் கொள்ளுகிறார்கள். பிராமணரல்லாதாருக்கு ஸ்தானம்கிடைப்பது அரிதா யிருக்கிறது. மகமதியர்களுக் கிருப்பதுபோல எங்களுக்கும் பிரத்யேகமாக ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப் படவேணும். ஜனத்தொகையில் நாங்கள் பெரும்பான்மையோர் இருப்பதால் அதிகமான ஸ்தானங்கள் எங்களுக்குக் கிடைக்க வேணுமென்று பெருங்கிளர்ச்சி செய்தனர். இக்கிளர்ச்சியின் பயனாக, 'ஹோம் லேர்' 'ஆண்டிஹோம்லேர்' என இரு

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

பழய முறைப்படி, உத்தியோகஸ்த ரல்லாதாருக்காக ஏற்படுத்
தப்பட்ட எல்லா ஸ்தானங்களுக்காக பிராமணரும் பிராமணரல்லா
தாரும் அபேக்ஷகராக நிற்கலாம். புதியமுறைப்படி, பிராமணரல்லாதார்
எல்லா ஸ்தானங்களுக்கும் அபேக்ஷகராக நிற்கலாம். ஆனால், பிரா
மணர்கள் சில ஸ்தானங்களுக்குமட்டும் அபேக்ஷகர்களாகி நிற்கலா
மேயொழிய எல்லா ஸ்தானங்களையும் அடைய விரும்பமுடியாது,
பிராமணரல்லாதார் செய்த கிளர்ச்சியின் பயனென்ன வென்றால் சட்
சபையில் பிராமண ரல்லாதாருக் கென்றே சிலஸ்தானங்கள் தண்டு
படுத்தப்பட் டிருத்தலே பிராமணரல்லாதருக்கு அதிக சுதந்தரம்
உண்டாகி யிருக்கிறது. பிராமணர்களது சுதந்தரம் குறைக்கப்டிருக்
கிறது.

பிராமணர்களும் பிராமணரல்லாதாரும் கலந்து ஆலோசித்து,
பிராமண ரல்லாதாருக்கு எத்தனை ஸ்தானங்களை ஒதுக்கிவைக்கப்பட
வேணுமென்பதை நிச்சயித்து கவர்ன்மெண்டுக்குத் தெரியப்படுத்த
வேணும். இவ்விரு கக்ஷியாரும்இவ் விஷயத்தைப்பற்றி ஒருதீர்மானத்
துக்கு வராவிட்டால், கவர்ன் மெண்டாரே ஒரு கமிட்டி ஏற்படுத்தி
அக்கமிட்டியார் இவ் விஷயத்தில் செய்யும் தீர்மானத்தை அனுஷ்டா
னத்துக்குக் கொண்டு வருவார்களென்றும் புதிய சட்டத்தில் கண்டி
ருக்கிறது.

பிராமணரல்லா தாருக்குச் சிலஸ்தானங்கள் ஒதுக்கிவைக்கப்
பட்டிருக் கின்றனவென்று கூறினேன். படிப்புவாசனை யறிந்தவரும்
ஜனத்தொகையில் மிக்கவருமாகிய பிராமண ரல்லாதாருக்குள் சுமார்
120-ஜாதியார் உளர். இவர்களுக்குள் செல்வாக்குள்ளவர்கள் சில
ஜாதியாரே. இவர் வகுப்பினரே எல்லா ஸ்தானங்களையும் அடைந்து
விடுவார்களென்ற பயம் மற்ற ஜாதியாருக்குள் ஏற்படுகிறது. பிராம
ணர்களுக்கு விரோதமாய் இதுகாறும் சொல்லப்பட்ட குறைகள் இச்
செல்வாக்குடைய ஜாதியாரைப் பற்றியும் வெகு சீக்கிரத்தில் சொல்
லப் படுமென்று நினைப்பதற்கிடமுண்டு. மிஸ்டர் எஸ். கே. துளசி
ராம், பி. ஏ., பி. எல்., அவர்கள், பிராமணரல்லாதார் பிரதிநிதியாக
இங்கிலாந்து சென்று கூட்டுக் கமிட்டியார் முன்னே கொடுத்தவாக்கு
மூலத்தில், ஒரு உபமானம் எடுத்துக் கூறினார். அதாவது சர்க்கஸ்
காரன் ஒருவன் தன்னிடமிருக்கும் மிருகங்க ளெல்லாவற்றையும்
ஒரே கூட்டில்போட்டு அடைத்து உணவு அளித்தால் சிங்கமும் புலி
யுமே அவைகளை அழித்து விடுவனவேதவிர மற்ற மிருகங்களுக்கு யாதொ
ன்றும் கிடைக்காமல் போமென்பதாம். இந்த உபமானம் முற்றிலும்



சரியான தென்றுவைத்துக் கொள்ளுவோம். அவர்கள் கூறியபுலிகளும்
சிங்கங்களும் யார்? பிராமணர்க ளென்றுதான் அர்த்தமாகிறது. மிஸ்
டர் துளசிராம் அவர்கள் கூறிய வண்ணம் சிங்கங்களையும் புலிகளை
யும் பிடித்து வேறொரு கூட்டிலடைத்துவிட்டு இரைபோட்டுப் பார்ப்
போம் அந்தோ! சிறுத்தையும், கரடியும், யானையும், இருக்கின்றன.
அவற்றைப்பார்த்து, குதிரையும், ஆடுகளும், குரங்குகளும், நாய்
களும் பின்னடைகின்றன. இவற்றிற்கு இரைபோடுவ தெங்ஙனம்.

யாதொரு சரியான முகாந்தரமில்லாமல் அக்கிரமமாய் வருத்தப்
பட்டுவருபவரும் தேசத்துக்குஇன்றியமையாத தொழில்களைச்செய்து
வருபவருமான சில வகுப்பினருக்குத் தனிப் பிரதிநிதித்துவம் கொ
டுத்து அவர்களுக் குள்ள குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள
வேதுவை யுண்டுபண்ணுவது நியாயமாகும். தாழ்ந்து கிடப்பவர்
களையெல்லாம் உயர்த்திவிடப் போகிறோமென்கிற பிராமணரல்லாதார்
தலைவர் எவ்வளவுதூரம் இதைச் சாதிப்பார் என்பது வெகு சீக்கிரத்
தில் வெளியாகிவிடும்.

ஒவ்வொரு ஜாதியாருக்கும் தனிப்பிரதிநிதித்துவம் கிடைக்காது
நமது மாகாணத்திலுள்ள சுமார் 120-ஜாதியாருக்கும் தனிப்பிரதி
நிதித்துவம் வேண்டிய அவசியமேயில்லை, ஏனெனில் இவர்களுள்
பெரும் பான்மையான ஜாதியாருக்கு கொள்வினை கொடுப்பினை மாத்
திரம் இல்லையேதவிர மற்றஜனசமூக சம்பந்தமான பொதுக்ககாரியங்
களில் இவர்களெல்லா உரிமையும் சுதந்தரமும் அடைந்து வருகிறார்
கள். சில ஜாதியார்கள் மட்டும் தாங்கள் பிறரிலும் எவ்விதத்திலும்
தாழ்ந்தவரா யில்லாதபோதிலும், ஏதோ ஒரு காரணம்பற்றி, ஒவ்
வொரு மனுஷனும் பொது ஸ்தாபனங்களில் அடையவேண்டிய உரி
மையை இழக்கும்படி பிறரால் வருத்தப்பட்டு வருகின்றனர். இவர்
களுக் கல்லவோ தனிப்பிரதி நிதித்துவம் கிடைக்கவேணும்.

இனிநம் குலத்தவரின் நிலைமையைச் சற்று கவனிப்போம். நம்
குலத்தவருள் சுமார் 7-லக்ஷம்பேர் இச்சென்னை மாகாணத்தில் இருக்
கின்றனர். இதில் சுமார 4-லக்ஷத்து 10-ஆயிரம்பேர் நமது பாண்டிய
நாடாகிய மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களில்
உளர். நம்மவருள் விவசாயர்களும் வியாபாரிகளும் பெரும்பான்மை
யோர் கவர்ன்மெண்டுக்கு ஏராளமான வரிசெலுத்துகிறோம். ஆகை
யால் 'ஓட்' கொடுக்கும் சுதந்தரம் அநேகருக்குக் கிடைக்கும். நாம்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

கல்வியிலும், செல்வத்திலும் செல்வாக்கிலும், நாகரீகத்திலும் யாருக்கும் பின்னடையாமல் முன்னேறிக் கொண்டு வருவது நமது விரோதிகளும் ஒப்புக்கொள்ளும் விஷயம். ஆயினும் ஜன சமூகத்தில் நமக்குச் சில குறைகள் இருக்கின்றன. அவற்றை நீக்குவது பெரும்பாலும் நமது கடமையே. நமது உரிமைகளைப் பாது காப்பதற்கும் நமது குறைகளையும் பிறரால் நாம் அடையும் துன்பங்களையும் கவர்ன்மெண்டாருக்கும், ஜனங்களுக்கும் தெரிவிப்பது அவசியம். நமது குறைகளை ஜனங்களுக்கு எடுத்துக் காட்ட நமது நாடார் குலமித்திரன் பத்திராசியர் போன்ற பலர் சுய நலத்தைக் கருதாமல் குலாபிமானத்துடன் வெளி யேறவேண்டும். நமது கஷ்டங்களை நிவர்த்தி செய்ய மாகாண சட்ட சபையில் நமது பிரதி நிதி யொருவர் இருக்க வேண்டியது அத்யாவசியம். 'ஓட்' சுதந்தரம் நமக்கு அதிகரிக்கப் போவதால், இத்தருணத்தில் நமது பிரதிநிதி யொருவரை எவ்விதத்திலும் சட்ட சபைக்கு அனுப்பப் பிரயாசைப்பட வேண்டும். இவ்விஷயத்தில் ஊக்கமற்றிருப்போமானால் புதிய சீர்திருத்தங்களின் லாபத்தை யடைந்தவர்களாக மாட்டோம். நம் குலம் மிகவும் பின்னடைந்து விடும்.

உலகப்போக்கும் ராஜிய தந்திரமும் தெரிந்தவரும் தேசாபிமானம் குலாபிமானம் நிறைந்து வரும் சட்ட சபையில் எதிர்த்துப் போராடக்கூடிய திறமை வாய்ந்த வரும் நம்மவருள் சிலர் தோன்றியிருக்கிறார்கள். இவர்களில் சிலர் அபேக்ஷகராக முன் வரவேண்டும், நாம் இப்போது தான் முதல் முதல் சட்ட சபை ஸ்தானத்தை அபேக்ஷிக்கிறபடியாலும் நம் குலப் பிரதிநிதி சட்டசபையில் எவ்வாறு உழைப்பாரென்பது மற்ற குலத்தவருக்குத் தெரியாதாகையாலும் நமக்கு மற்றவர்களது 'ஓட்' கிடைப்பது வெகு கஷ்டம் 'ஓட்' சுதந்தரமுடைய நம்மவர்கள் தங்கள் ஓட்டை நமது பிரதிநிதிக்கே கொடுப்பதாய்த் தீர்மானித்து விடவேண்டும். எவ்வித முகாந்தரத்தை யிட்டும் நமது ஓட்டை பிறருக்குக் கொடுக்கக்கூடாது. இவ்விஷயத்தில் ஒரே மனதுடையவர்களாய் ஒற்றுழைத்தால் மட்டும் நமக்குச் சட்ட சபையில் ஸ்தானம் கிடைக்குமென்பதை நாம் திட்டமாய் அறிய வேணும்.

சட்ட சபையில் ஸ்தானம் வகித்து நமது குலத்துக்குப் பெருமையுண்டு பண்ணும் லாயக்குள்ள ஒருவரை நமது நாடார் மஹாஜன சங்கம் தெரிந்தெடுத்து அவர் எலக்ஷனில் வெற்றி பெறவேண்டிய



கல பேற்றாகேளும் செய்யும் என்று நம்புகிறேன். ஸ்தானத்துக்கு அபேக்ஷகராக நிற்க விரும்புவோர் தங்கள் பெயரையும் விலாசத்தையும் நாடார் மஹாஜன சங்கம் காரியதரிசி யவர்களுக்கு அறிவித்தல் உத்தமம்.

மசோதா சட்டமாகி விட்டது எலக்ஷன் விதிகளும் வெளியானவுடன் அவற்றைப் பற்றி எழுதுகிறேன்.

---

## சகோதரத்வம்.

ஒரே தாயாருக்குப் பிறந்த ஆண்மக்கள் சகோதரர்களென்றும் பெண் மக்கள் சகோதரிக ளென்றும் கூறப்படுவர். சகோதரத்வமென்பது ஒரே மாதா அல்லது ஒரே பிதா மாயிற் றோன்றியவர்களின் சம்பந்தத்தைக் குறிக்குஞ் சொல். ஒரு குடும்பம் நல்ல நிலைமையி லிருக்க வேண்டுமானால் அதன் அங்கத்தின ரெல்லாரும் ஒற்றுமையுடனும், பிறருக்கு நிகழும் சுக துக்கங்களை தங்களுக்கு நேரிட்டதாக பாவித்தும் மற்றவர்களுக்குத் தங்களா லியன்ற உதவி புரிந்தும் பொதுவாய் குடும்பத்தின் க்ஷேமத்தையே ஏனையவற்றிற்குஞ் சிறந்ததாகக் கருதி நடக்க முயல வேண்டும். ஒற்றுமை யில்லாக் குடும்பம், எவ்வாறு எருதுகள் ஒற்றுமை குன்றியவுடன் சிங்கத்திற்கு இரையானதோ அங்ஙனம் அதன் சீரும் சிறப்புங் குறைந்து கடைசியாக தாழ்ந்த ஸ்திதியில் வந்து விடுமென்பது மானிடர் எல்லாருக்கும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கும்.

ஒருவரது ஜெனன பூமியானது அவரது பிதா நாடு அல்லது தாய் நாடு என்று கூறப்படும், மாதா, பிதா, மக்களின் க்ஷேமத்தைக் கருதுகிறவர்கள் அவர்களுக்கு உணவுடை அளித்தும் அவர்கள் கல்வி அபிவிருத்திக்கு பாடு பட்டுப் பணம் சம்பாதித்து செலவும் செய்கிறார்கள். குழந்தை அன்னையின் பால் அருந்தி வளருவது போல் நாம் பூமி ஈன்ற நெல் கோதுமை முதலிய தானியங்களால் ஜீவித்திருக்கிறோம். ஆகையால் நம்மை வளர்ப்பது பூமியே. இக்காரணம் பற்றியே நம் தேசத்தை தாய் நாடென்று விளம்புகிறோம். ஆகையால் அந்த தேசத்தில் ஜனித்தவர்க ளெல்லோரும் சகோதர ராவார்.

மேலும் நாமெல்லோரும் கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டவர்களாயிருந்தாலும் சகல மானவர்களுக்கும் கடவுளே பிதாவென்று சாஸ்திர முறை யிடுகின்றது. ஆகலால் நாமெல்லாரும் சகோதரர்களாவோம். அப்படி யிருக்க இந்த ஜாதி மேலான தென்று வாதம் புரிவது எவ்வளவு மதியீனம். அந்தோ! நமது தேசத்தில் முதல் தீர்த்தம் இரண்டாம் தீர்த்த மென்றும், இது போன்ற சில அற்ப

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection



விஷயங்களிலும் இலக்ஷக் கணக்காக திரவியத்தை நியாய ஸ்தலங்களில் வாதம் புரிந்து வீணாகச் செலவிடுகிறார்களே என்ன பேதமை? அந்தப் பணத்தை நமது சகோதரர்களின் கல்வி அபிவிருத்திக்குச் செலவிட்டால் எவ்வளவு நன்மையை விளைவிக்கும். அவர்களுடைய ஜென்மங்கூட கிருதார்த்த மாவதற்கு அது வொரு சாதனமாகுமென்பதை அறிகிறார்களில்லையே! எல்லா முணர்ந்த ஜெகதீசா! அவர்களுக்கு எப்பொழுது நற்புத்தி வரும்படி செய்யப் போகிறாய்.

"ஜாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால் நீதி வழுவா நெறி முறையின்—மேதினியில் இட்டார் பெரியோர் இடாதா ரிழி குலத்தோர் பட்டாங்கி லுள்ளபடி."

என்று சரஸ்வதியின் அவதாரமாகிய ஔவை யம்மையார் திருவாய் மலர்ந்தருளி யிருக்கிற தத்வத்தை தெரிந்து கொண்டார்களில்லை போலும்

"ஆக்கு மறிவானலது பிறப்பினால்
மீக்கோளுயர் விழிவு வேண்டற்க"

என்று சிவப்பிரகாச ஸ்வாமிகளருளிய உண்மை இங்கு நோக்கத் தக்கது.

ஸ்ரீ கிருஷ்ண பிரான் பகவத் கீதையில் ஜனங்களின் குணாதிசயங்களைக் கருதி நான்கு வருணங்களாகப் பிரித்திருக்கிறே னென்றும் பகவத் தியானத்தில் அதிகப் பற்றுள்ள வர்கள் பிராமணர்களென்றும் வீரத்தன்மை யுள்ளவர்கள் க்ஷத்திரியர்க ளென்றும் விவசாயம் வியாபாரத்தில் புத்தியைச் செலுத்த மியல் புள்ளவர்கள் வைசியர்க ளென்றும் கேவலம் கூலி வேலை செய்து ஜீவனம் செய்வோர் சூத்திரர்க ளென்றும் ஜாதியை வகுத் திருப்பதாக அருஜ்ஜுனனிடம் கிருஷ்ண பிரான் சொல்லுகிறார். ஜனங்கள் சிருஷ்டிக்கும் பொழுதே ஜாதிகளை சிருஷ்டிக்கவில்லை. இன மினத்தோடொட்டும் வெள்ளாடு தன்னோடே யென்பது போல் ஒரே மாதிரி குணமுள்ள மனிதர்கள் ஒன்று சேர்வது இயல்பு அவர்களுள் கொள்வன கொடுப்பன செய்து கொள்வது மியல்பு. இது நாளாரம்பத்தில் பலப்பட்டு இந்தியாவில் மட்டும் நான்குஜாதிகளாக ஏற்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. கடவுளே ஜாதியை சிருஷ்டித்திருந்தால் நமது தேசதில்மட்டுமா சிருஷ்டிப்பார். கிருஷ்ணபிரான் நமக்கு மட்டுமா கடவுள் உலகத்திலுள்ளாரனைவருக்குமவர் கடவுளென்று நாம் கருதவில்லையா.

(இன்னும்வரும்.)

எம். ராமகிருஷ்ணய்யர்,
அருப்புக் கோட்டை.

Tamil Heritage Foundation
தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials
e-Book series
an international NGO initiative to digitize old Tamil books
and palm leaf manuscripts
visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection